மன்றம்

இரா. நெ

1 – 5 – 56

★

5 :: இதழ் 1

•

★

அணா 4

•

★

திங்களிருமுறை

1947 ஆகஸ்டு 15

இந்தியத் துணைக்கண்டத்தை இந்தியா - பாக்கிஸ்தான் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, அவைகளுக்கு 1947 ஆகஸ்டு 15இல் விடுதலை வழங்குவது என்று பிரிட்டிஷ் வல்லரசு முடிவுசெய்து அதனை வெளியிட்டது. காங்கிரஸ் கட்சியினரும், முஸ்லிம் லீகினரும் அந்த முடிவை முழுமனதோடு வரவேற்றனர். நாட்டிலுள்ள பிற பெரும்பாலான அரசியல் கட்சிகளைச் சார்ந்தோரும், பொதுமக்களும் இந்தியத் துணைக் கண்டத்திற்குக் கிடைக்கும் விடுதலையை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அப்பொழுது திராவிட முன்னேற்றக்கழகம் தோன்றவில்லை; திராவிடக்கழகம் மட்டுமே இருந்துவந்தது. கழகத்தினர் எல்லோரும் ஆகஸ்டு 15ஆம் நாளை வரவேற்பதா? அல்லது வெறுப்பதா? என்ற குழப்பமான நிலையில் இருந்தனர். அப்பொழுது திராவிடக்கழகத்தலைவராக இருந்த பெரியார் இராமசாமி அவர்கள், கழகச் செயற்குழுவைக் கூட்டாமல், கழக முன்னணியினர் யாரையும் கலக்காமல், **ஆகஸ்டு 15ஆம் நாளைத் துக்க நாளாகக்** கொள்ளும்படி அறிக்கை வெளியிட்டுவிட்டார்கள்.

ஆகஸ்டு 15ஆம் நாளில் நடைபெறுவதாக இருந்ததெல்லாம், இந்திய ஆட்சிப் பொறுப்பிலிருந்து வெள்ளை ஏகாதிபத்தியம் விலகுவது என்பதும், இந்திய யூனியன் ஆட்சிப் பொறுப்பைப் பெரும்பான்மையான அரசியல் கட்சியாக விளங்கிய காங்கிரசு ஏற்பது என்பதும் ஆகும். இவற்றில் முக்கியமான நிகழ்ச்சி 'வெள்ளை ஏகாதிபத்தியம விலகுகிறது' என்பதுதான். அந்த நிகழ்ச்சியைப் பொறுத்துத்தான் பிறநிகழ்ச்சிகளெல்லாம். வெள்ளையர் விட்டுப்போகும் பொறுப்பை, ஏற்கும் சூழ்நிலையைக், காங்கிரசைத்தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் அப்பொழுது உருவாக்கவில்லை. காங்கிரசு பொறுப்பை ஏற்பது என்பது, அப்பொழுது தவிர்க்கமுடியாததொரு சூழ்நிலையாகும். ஆட்சிப் பொறுப்பைக் காங்கிரசிடத்தில் விட்டுப் போவதா அல்லது வெள்ளையனே தொடர்ந்து இருந்து ஆளுவதா என்பதுதான் அப்பொழுது நிலவிவந்த நிலைமையாகும். இவற்றையெல்லாம் நன்கு ஆராய்ந்துபார்த்த அறிஞர் அண்ணா அவர்கள், 'வெள்ளையர் ஆட்சி வெளியேறுவது' என்பது, உடனடியாக நிறைவேறவேண்டிய தலையாய நிகழ்ச்சியாகும் என்ற அசைக்கமுடியாத முடிவுக்கு வந்தார்கள். காங்கிரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்பது என்பது விரும்பத்தகாததொன்று என்றாலும், அது தவிர்க்கமுடியாததொன்றாக இருந்ததாலும், என்றைக்கேனும் ஒருநாளைக்கு பிறமுற்போக்குக்கட்சிகள் அந்தப்பொறுப்பைத் தாங்கும் நிலைமை ஏற்பட வழியிருந்த காரணத்தாலும் வெள்ளையர் ஆட்சி வெளியேறுவது எல்லாவகையிலும் வரவேற்கவேண்டியதொன்றே என்று அறிஞர் அண்ணா அவர்கள் எண்ணினார்கள்.

மேற்கண்ட அந்த முடிவோடு அண்ணா அவர்கள் சென்னைவந்து, செம்புதாஸ்தெரு, 79 ஆம் எண் கட்டிடத்தில், 30 ஆம் எண் அறையில் இருந்த தோழர் இரா. நெடுஞ்செழியன், இரா. செழியன், ப. வாணன் ஆகியோரைக் கலந்தாலோசித்தார்கள். "வெள்ளையர் ஆட்சி வெளியேறுவதிலே நமக்குள்ள மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் கடைசி வாய்ப்பு 1947 ஆகஸ்டு 15ஆம்நாளே ஆகும். ஆகவே அதனை மகிழ்ச்சிக்குரிய நாளாகவே கொள்ளவேண்டும்" என்று அவர்கள் அண்ணாவிடம் தெரிவித்தார்கள்.

'ஆகஸ்டு 15 துக்கநாள் அல்ல, மகிழ்ச்சிக்குரிய நாளே' என்ற கருத்தைப் பெரியாரிடம் தெரிவித்து அதற்கான முறையில் அவரிடம் விளக்கந்தந்து, எல்லோரும் கலந்து செய்யும் முடிவு ஒன்றினைக் காணவேண்டும் என்று விரும்பி அண்ணா அவர்கள், பெரியாரிடம் ஒரு நண்பரை இது குறித்துத் தூது அனுப்பினார்கள். பெரியார் அவர்கள், தாம் செய்துகொண்ட முடிவை மீண்டும் பரிசிலிக்க இணங்கவில்லை என்று அண்ணாவுக்கு விடை வந்துசேர்ந்தது. பிறகு வேறு வழியில்லாமல் அறிஞர் அண்ணா அவர்கள் ஆகஸ்டு 15 மகிழ்ச்சிக்குரியநாளே' என்னும் கருத்துப்பட நீண்டதொரு கட்டுரை எழுதி "திராவிட நாடு" இதழில் வெளியிட்டார். அதில், கழகத்தலைவர் தம்மீது குற்றங் கண்டு நடவடிக்கை எடுக்க முனைந்தாலும், அதனை ஏற்கத் தாம் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் முடிவே சரியான அறிவுக்கொத்த முடிவு என்று ஆன்றோராலும் சான்றோராலும் அன்றும் போற்றப்பட்டது; இன்றும் போற்றப்படுகிறது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

1 - 5 - 56 செவ்வாய்க்கிழமை

ஐந்தாம் ஆண்டு

'மன்றம்' தனது நான்கு ஆண்டு காலப் பயணத்தைச் சீரும் சிறப்பும் பொருந்த முடித்துக்கொண்டு, ஐந்தாவது ஆண்டில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அடிஎடுத்து வைக்கிறது. இந்த மகிழ்ச்சிக்குரிய நாளில் 'மன்றம்' படிப்பாளர்க்கும் - ஆதரவாளர்க்கும் - விற்பனையாளர்க்கும் எம் உளமார்ந்த வணக்கமும், மகிழ்ச்சியும், நன்றியும், வாழ்த்துக்களும் உரியவாக !

'மன்றத்'தின் பிறப்புநாள் மே முதல் நாளாக அமைந்திருப்பது நமது மகிழ்ச்சியை இரட்டிப்புமடங்காக ஆக்குகிறது.

திராவிட ஏழை - எளிய - பாட்டாளி - தொழிலாள மக்களின் தாயக விடுதலைக்காகவும், வாழ்வின் உரிமைகளுக்காகவும், அரசியல் மேம்பாட்டிற்காகவும், பொருளாதார வளர்ச்சிக்காகவும், சமூக உயர்வுக்காகவும் அரும்பாடுபட்டுவரும் 'மன்றம்' தொழிலாளரின் உரிமை முழக்க நாளான இன்று, ஆதிக்கக்காரர்களை, அவர்கள் எந்த உருவில் உலவினாலும், எதிர்த்து நின்று, "வாழவிடு" என்ற உரிமை வேட்கைக் குரலை எழுப்புவதே பூரிப்பும், பெருமையும் கொள்கிறது.

திராவிடத்தின் உண்மையான பொதுவுடைமைப் பூங்காவாகவும் - சமதர்மச் சோலையாகவும் - பகுத்தறிவுப் பாசறையாகவும் செந்தமிழ்ச் சிறப்பிடமாகவும் விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களை, நாட்டினர்க்கு நல்லமுறையில் உணர்த்திடும் நல்லறமன்றமாக 'மன்றம்' திகழ்ந்துவருகிறது. திராவிடப் பெருங்குடிமக்களுக்குக் குறிப்பாகத் தமிழகப் பெருங்குடிமக்களுக்கு உலகப் பொது அறிவை ஊட்டுதலும், அறிவியல் விளக்கந்தருதலும், சீரிய உலக வரலாற்றுச் சுவடிகளைப் புரட்டிக் காட்டுதலும், உலகைத் திருத்திய உயர்ந்தோரை அறிமுகப்படுத்துதலும், ஆன்றோரின் அறிவுரைகளையும் சான்றோரின் பொன்மொழிகளையும் கொண்டு வந்து நிறுத்துதலும், சுவையுள்ள இலக்கிய நயச் சாற்றைப் பிழிந்தெடுத்துத் தருதலும், அவர்களுடைய மூடப்பழக்கவழக்கங்களை அகற்றுதலும், குருட்டுநம்பிக்கையைப் போக்குதலும், அவர்களிடம் அன்பும் அருளும் அறிவும் ஆற்றலும் ஒன்றாய் இணைந்த பகுத்தறிவு நெறியைப் பரப்புதலும், திராவிட மேம்பாட்டிற்கான அரசியல்-பொருளாதார-சமுதாயக்கருத்துக்களை விரிவாகஎடுத்து மொழிதலும் ஆகிய சீரிய பணிகளை 'மன்றம்' இடைவிடாது செய்து வருகிறது. அத்தகைய பணிகளைச் செய்து வருவதிலே மிக்க பெருமிதம் கொள்கிறது.

'மன்றம்' வனப்பாகவும், வளப்பாகவும் இல்லாவிட்டாலும் இது மணமும், குணமும் நிரம்பிக்காணப்படுகிறது என்று இதனைப் படிப்போர் கூறுகிறார்கள் என்றால், அதுவே எமக்கு களிபேருவகையை ஊட்டுவது மட்டுமல்லாமல், 'மன்றத்'தை மேலும் மேலும் வளர்ப்பதற்கான உணர்ச்சியையும், ஊக்கத்தையும் அளிப்பதாகும். வண்ண ஓவியங்களோடும், விதவிதமான அமைப்புகளோடும் கூடிய பெரிய அளவில் 'மன்றத்'தைக் கொண்டுவரவேண்டும் என்ற ஆவல் எம் உள்ளத்தில் எப்பொழுதும் பொங்கி எழுந்து அலைமோதிக் கொண்டுதானிருக்கிறது. ஆனால் அந்த ஆவலை நிறைவேற்றி வைக்க இயலாதபடி பொருளாதார நெருக்கடி தூரல் வலையைப் பிடித்து அழுத்திக்கொண்டேயிருக்கிறது. அன்பர்களும் நண்பர்களும் 'மன்றத்'திற்குப் புதுப்புது சந்தாக்காரர்களைச் சேர்த்துத் தருவதன் மூலமும், புதுப்புது ஊர்களில் புதுப்புது விற்பனையாளர்களை அமர்த்தித் தருவதன்மூலமும், விளம்பரங்கள் வாங்கி வழங்குவதன் மூலமும், நிதி திரட்டித் தருவதன்மூலமும் நல்லாதரவுகாட்ட முனைவார்களேயானால், எமது ஆவலை எளிதில் நிறைவேற்றிவைக்க வாய்ப்பு ஏற்படும். அத்தகைய நல்லாதரவைக் காட்டுமாறு அன்பர்களையும் நண்பர்களையும் வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம். ஒழுங்காகவும், நாணயமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ளக்கூடிய விற்பனையாளர்களையே 'மன்றம்' ஆங்காங்கு எதிர்பார்த்து நிற்கிறது. அத்தகையோரை இருகைகூப்பி வரவேற்கிறது.

'மன்றத்'திடத்தில் அன்புகாட்டி, அதற்கு ஆதரவு நல்கிவரும் சந்தாதாரர்களுக்கும், விற்பனையாளர்க்கும், படிப்பாளர்க்கும், எழுத்தாளர்க்கும், விளம்பரத்தார்க்கும், அலுவலகத்தார்க்கும், அச்சகத்தொழிலாளர்க்கும் எமது உளம்கனிந்த நன்றியும், வாழ்த்துக்களும், இந்த ஐந்தாம் ஆண்டு துவக்க நாளில் உரியவாக !

கருத்துக் கதிர்

உள் எண்ணம் தெளிவாகிறது

" இன்னும் பத்தாண்டுகளுக்குள், இந்தி, இந்தியாவின் பொதுமொழியாகக் கட்டாயம் ஆக்கப்படவேண்டும் இந்தி கற்றுக்கொள்வது என்பது ஒரு தேசீயக் கடமையாகும் "

—என்று பண்டிதநேரு அண்மையில் பீசபூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

இந்தியை எவர்மீதும் அவர் விருப்பத்திற்கு மாருகத் திணிக்கமாட்டோம், அதனை எங்கும் கட்டாயப்படுத்தமட்டோம் என்று, தென்னாட்டவர்கள் இந்தியை எதிர்த்துக் கொதித்தெழுந்த பொழுதெல்லாம் பசப்புமொழி பகர்ந்த பண்டிதநேரு, அது கட்டாயப்படுத்தப்படவேண்டும் என்னும் கருத்தை இப்பொழுது வடநாட்டில் வெளியிட்டுள்ளார். இதிலிருந்து அவர் உள்எண்ணம் என்ன என்பதை நாம் எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழல்லாத உலகின் பிறபகுதிகளோடு தொடர்பு கொள்ளும் மொழியாகவும், எல்லாப்பகுதிகளுக்குமான பொதுமொழியாகவும் ஏற்கத்தக்கது ஆங்கில மொழியேயல்லாமல், இந்தி மொழி அல்ல என்பதை நாம் என்றென்றும் வற்புறுத்தி அதில் வெற்றிபெறுவோமாக!

* * *

சென்னை அமைச்சர்கள் உணர்வார்களா?

" மாநிலப் புதுஅமைப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் முடிவுகளில், சில தவருனவையாக இருக்கலாம். சர்க்கார் தனது முடிவை மாற்றிக்கொள்ளுமாறு மக்கள் எப்போதும் தூண்டலாம்.

" நடைபெறுவது மக்கள் சர்க்கார். சர்க்காரை அடக்கி ஆள்வது மக்களே! இந்த நாட்டில் ஒன்றும் சர்வாதிகார ஆட்சி நிலவவில்லை; சனநாயக ஆட்சிதான் நிலவுகிறது; எனவே, ஏதாவது தவறுகள் நிகழுமேயானல் அவற்றை மக்கள் திருத்தலாம்-திருத்தவேண்டும் "

—என்று பண்டிதநேரு பீசபூர் பொதுக்கூட்டத்தில் கூறியுள்ளார்.

பண்டிதநேருவுக்குச் சீடர்களாக விளங்கும், சென்னை அமைச்சர்கள் தோழர்கள் காமராசரும், சுப்பிரமணியமும், பக்தவத்சலமும் பண்டிதநேருவின் மேற்கண்ட கருத்தை ஏனே உணர மறுக்கிருர்கள்?

பண்டிதநேரு கூறுவதுபோல், அரசாங்கம் செய்யும் தவற்றைச் சுட்டிக்காட்டி, அதனைத் திருத்தும்படி கூறும் ஒரு நடவடிக்கையைத்தான், சர்வகட்சிக் கூட்டணியினர், பிப்ரவரி 20-ஆம் நாளில் 'அர்த்தால்' உருவில் மேற்கொண்டனர். இதனை மதிக்க மறுப்பதோடு மட்டுமல்லாமல் இழித்தும் பழித்தும் பேசும் கயமைப் பண்பில் சென்னை அமைச்சர்கள் இறங்கியிருப்பதிலிருந்து, இவர்கள் எவ்வளவு பெரிய சனநாயகப் பகைவர்கள் என்பதை நாம் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

பண்டிதநேருவின் 'வாலை' எதுஎதற்கோ பிடிக்கும் சென்னை அமைச்சர்கள் இந்த வகையில் அவர் கருத்தை ஏற்க ஏனே முந்தவில்லை? இனியேனும் உணர்வார்களா?

* * *

இந்த அறிவு அப்பொழுது ஏனே இல்லை?

" சர்க்காரின் சில செய்கைகளை ஆட்சேபிப்பதற்காக இரயில்வேக்களிலுள்ள பெயர்ப் பலகைகளை அழிக்கவும், இரயில்களை ஓடவிடாமல் பாதைகளில் உட்கார்ந்து மறியல் செய்யவும், அபாயச் சங்கிலிகளை இழுத்து இரயில்களை நிறுத்தவும் முற்படும் சமூக விரோதிகளை ஒடுக்கவேண்டும் "—" என்று நிதியமைச்சர் - நீதியமைச்சர் - படிப்புஅமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்னை வானொலியில் அரற்றியுள்ளார்.

திராவிட முன்னேற்றக்கழகத்தாரை மனதில் வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்த அறிவு அவருக்கு 1942 ஆகஸ்டுப் புரட்சியின்போது ஏனே அமைச்சருக்கு வரவில்லை? அப்போது காங்கிரசுக்காரர்கள் - தோழர் சுப்பிரமணியம் அவர்களது பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இரயிலைக் கவிழ்க்கவும், உயிர்ச்சேதம் உண்டாக்கவும், தண்டவாளத்தைப் பெயர்க்கவும், தந்திக்கம்பியை அறுக்கவும், தபால் அலுவலகத்தைக் கொளுத்தவும் செய்தனர். அவற்றையெல்லாம் கண்டித்துரைக்க முன்வராத தோழர் சுப்பிரமணியம் அமைதியாக நடைபெற்ற தி. மு. கவின் அறிகுறிப் போராட்டத்தைக் கண்டிக்க வந்துவிட்டார். காங்கிரசுக்கு ஒரு நீதி கழகத்திற்கு ஒரு நீதிபோலும்!

இன்றைய ஆள்வந்தார்கள் சனநாயகப் பண்பிற்கு எவ்வளவு பகையானவர்கள் என்பதை இதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

செய்திச்சுருள்

ஆந்திரப் பிரதேசம்

ஆந்திர - தெலுங்கானு என்ற பெயருக்குப் பதில், 'ஆந்திரப் பிரதேசம்' என்று பெயர்வைக்கக்கோறும் தீர்மானத்தை, ஐதராபாத் சட்ட மன்றத்தில், காங்கிரசு உறுப்பினர் ஒருவர் கொண்டுவர, ஏகமனதாக எல்லோராலும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. ஆனல் இங்கோ 'சென்னை' என்றுள்ள பெயரை மாற்றித் 'தமிழ்நாடு' என்று பெயர்வைக்க மறுக்கும் மானங்கெட்ட அமைச்சர்கள் இன்னமும் இருந்துவருகின்றனர்.

*　　*　　*

அல்ஜீரியாவின் விடுதலைப் போர்முழக்கம்

ஆப்பிரிக்காவில் பிரான்சின் வல்லரசுப்பிடியின்கீழ் இருந்துவரும் அல்ஜீரியா, பிரான்சின் ஆதிக்கத்தை எதிர்த்து, விடுதலைகோரிப், போராட்டம் நீடத்திவருகிறது. அல்ஜீரியாவுக்கு விடுதலைவாங்கித்தரும் பணியினை மேற்கொண்டு, அதற்காக ஐ. நா. அவையில் பாடுபட 16 ஆசியா - ஆப்பிரிக்கா நாடுகள் முனைந்துள்ளன.

பிரான்சின் பிடியின்கீழ் அகப்பட்டுக்கிடந்த ட்யூனிஷியாவும், மொராக்கோவும் அண்மையில்தான் விடுதலைபெறும் முயற்சிகளில் வெற்றிபெற்றன.

*　　*　　*

தீக்குச்சித் தொழிலுக்கான மரம்

தீக்குச்சித் தொழிலுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன், அத்தொழிலுக்கு அவசிய மான மரத்தை 16500 ஏக்கர் நிலத்தில், ஆற்றங்கரையோரத்தில் நட ரூ 12,40,000 திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. கோயமுத்தூர், நீலகிரி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென்ஆற்காடு, வடஆற்காடு, செங்கற்பட்டு, சேலம், தென்கன்னடம், மலபார் ஆகிய மாவட்டங்களில் அம்மரங்கள் இப்பொழுது பயிரிடப் படுகின்றன. திராவிடத்தில் அம்மரம் நடுவதற்கான வாய்ப்புள்ள இடங்கள் இன்னும் பல இருக்கின்றன.

அமெரிக்காவுக்குச் சென்னை லுங்கி

இந்த ஆண்டில் அமெரிக்கா சுமார் 5 இலட்சம் கஜம் லுங்கித்துணியைச் சென்னையிலிருந்து இறக்குமதி செய்ய திட்டமிட்டிருக்கிறது.

கட்டம் போட்ட லுங்கியால் தயாரான விளையாட்டு உடுப்புக்கள், அரைக்கால்சட்டைகள், பெண்களுக்கானகவுன்கள் ஆகியஇவை அமெரிக்காவில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. சென்னை லுங்கிக்குப் பெரிய மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது 'சென்னைத் துணி' என்று அங்கு அழைக்கப்படுகிறதாம். களியாட்டக் கருவிகளில் வாணிகம் செய்யும் பெரிய கம்பெனி ஒன்று ஏற்கனவே ஒன்றரை இலட்சம் கஜம் துணிக்கு எழுதியுள்ளது.

*　　*　　*

ஆற்றங்கரையில் தேக்குமரம்

திராவிடத்தின் மலைப்பகுதிகளில் தேக்கு மரங்கள் வளர்ப்பதைப்போலவே ஆற்றங்கரைப் பகுதிகளிலும் வளர்க்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

கட்டிடங்களில் உத்திரம் போடுவதற்கு இலக்கான தேக்குபோன்ற மரங்களை ஆற்றங்கரைகளில் உற்பத்தி செய்ய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை அருகேயுள்ள வெண்ணாறு, வெட்டாறு பகுதிகளில் தேக்குமர நாத்துக்கள் ஏற்கனவே ஊன்றப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. மேட்டுப்பாளையம் பகுதியில் 4800 ஏக்கராவில் தேக்கு மரம் வளர்க்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. பாலாறு, பெண்ணாறு, காவிரி, தாம்பிரபரணி, வைகை போன்ற பெரிய ஆறுகளின் கரையோரங்களில் தேக்குவளர்ப்பதற்கான திட்டம் போடப்பட்டிருக்கிறது அரசியலாரால். தேக்கு மரம் வளர்ப்பதில் தனிப்பட்டவர்களும் அக்கரை காட்டி வருகின்றனர்.

*　　*　　*

சூளை போடாமலேயே செங்கல்

சூளை போடாமலேயே யார்வேண்டுமானாலும் செங்கல் தயாரிக்கும் விதத்தை லூஸியானா பொறியர் (என்ஜினியர்) ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். உமிக்கரித்தூளை உருகிய தாருடனும், சாதாரணமண்ணுடனும் கலந்து தண்ணீரை ஊற்றி நன்ருகக் கலக்கி வார்ப்படங்களில் ஊற்றிவிடவேண்டும். இந்தப் பொருள் உலர்ந்துவிட்டால் உயர்தர செங்கல் ஆகிவிடுகின்றது. இந்தியாவிலுள்ள பொறியர்கள் கூட இதைச் செய்துபார்த்து வெற்றிகரமாக இருப்பதாகக் கூறியுள்ளனர்.

மலர்க்காடு

சிந்தனைச் செல்வம்

[ஆசிரியர்: திருச்சி தியாகராஜன். பக். 54. விலை: அணா 12. கிடைக்குமிடம்: மலர் நிலையம், 133 பிராட்வே, சென்னை-1]

இது ஒரு கவிதை நூல், அழகிய, இனிய எளிய நடையில் பாமரரும் புரிந்துகொள்ளும் வண்ணம் இயற்றப்பட்ட பல்வேறு கவிதைகளின் தொகுப்பு. சமுதாய சீர்திருத்தத்தை முக்கிய குறிக்கோளாகக்கொண்டு இந்நூல் இலங்குகிறது. சமுதாயத்தைக் கறைப்படுத்திக் கொண்டிருக்கும் மூடப் பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் ஆகியவற்றைத் தகர்த்தெறிந்து பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்புவதற்கு இந்நூல் உறுதுணையாக நிற்பதாகும். "பன்னாட்களாக என் உள்ளத்தை உறுத்திவந்த சமுதாயக் குறைபாடுகளே இன்று கவிதையுருவில் வெளிவந்திருக்கின்றன" என்று இதன் ஆசிரியர் தோழர் திருச்சி தியாகராசன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆசிரியரின் முயற்சி போற்றுதற்குரியது.

*　　*　　*

கலைக்கோயில்

[ஆசிரியர்: ரவி. கிரௌன் $\frac{1}{2}$ அளவு. பக். 12. விலை: அணா 2. கிடைக்குமிடம்: 27 சப்பாணி கோயில் தெரு, வடக்குமாசி வீதி, மதுரை.]

இது திங்கள் இருமுறை கலை இலக்கிய ஏடு ஆகும். இதன் முதல் இதழ் 15—4—56 இல் வெளிவந்திருக்கிறது. செந்தமிழுக்கு உயர்வும், பெருமையும், வளர்ச்சியும் தேடித்தரும் உயரிய நோக்கத்தோடு நண்பர் ரவி அவர்களும், அவரைச்சேர்ந்த தமிழார்வங் கொண்ட நண்பர்களும் இந்த இதழைத் துவக்கியிருக்கிறார்கள். இதழ் அழகிய முறையில் அமைந்திருக்கிறது. முதல் இதழை ரவி, அ. கி. பரந்தாமனார், தமிழ்மணி, புத்தனேரி வெங்கடாசலம், "புரு", மா. பாண்டியன், மதுரைக்கிழார் ஆகியோரின் எழுத்தோவியங்கள் அழகு படுத்துகின்றன.

*　　*　　*

தமிழ்நாடு டைம்ஸ்
The Tamilnad Times

[ஆசிரியர்: எம். ரோஜர்ஸ். டெம்மி $\frac{1}{2}$ அளவு. பக். 8. விலை அணா 1. கிடைக்குமிடம்: 187, மௌண்ட் ரோடு, சென்னை-2.]

இது தமிழும் ஆங்கிலமும், கலந்த திங்கள் இருமுறை இதழாகும். இதன் உள் நான்கு பக்கங்கள் தமிழிலும், வெளி நான்கு பக்கங்கள் ஆங்கிலத்திலும் அமைந்திருக்கின்றன. இவ்விதழ் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சுக்கும், பிற தி. மு. க. சொற்பொழிவாளர்களின் பேச்சுக்களுக்கும், தி. மு. க. செய்திகளுக்கும் முதலிடம் தந்து நல்ல முறையில் வெளியிட்டு வருகிறது. தமிழறியாத பிறர் தி. மு. க. செய்திகளையும், கொள்கைகளையும் ஓரளவுக்குப்புரிந்து கொள்வதற்கு இந்த இதழ் பெரிதும் உதவி புரியும்.

*　　*　　*

தென்மொழி

[ஆசிரியர்: கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி. பக். 284. விலை: (சாதாப் பதிப்பு) ரூ. 3—12—0 (பரிசுப்பதிப்பு) ரூ. 4—8—0. கிடைக்குமிடம்: மலர் நிலையம், பிராட்வே, சென்னை - 1.]

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் அவர்களின் ஆராய்ச்சி நிறைந்த அரும்பெரும் நூல்களில் இதுவும் ஒன்று. தென்மொழியாகிய தமிழ்மொழியின் செழுமையையும், சிறப்பையும் மிக அழகுபட ஆராய்ச்சிக்குறிப்புக்களோடு, இந்தநூலில், அறிஞர் அப்பாதுரையார் அவர்கள் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்கள். இனிமையும், சுவையும் பயக்கும் தூய தனித்தமிழ்நடை நூலை கவர்ச்சிகரமாக்குகிறது. இது ஒவ்வொருவரும் படித்துப் பயனும் சுவையும் பெறவேண்டிய அரிய நூலாகும்.

அப்பளத் தொழில் அதிபர்கள்

இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கும் நிலையில் இருக்கின்றது. நாட்டின் தொழில்வளம் பெருக, மக்கள் வாழ்க்கைநிலை உயர திட்டங்கள் தீட்டப்படு கின்றன. தொழில் வளம் பெருக வேண்டும், வருவாய் அதிகமாக வேண்டும், வாழ்க்கை நிலை உயர வேண்டும் இவற்றை மறுப்பார் எவருமில்லை. அதே சமயத்தில், இந்த வள மான நிலை எய்த, திட்டங்கள் தேவை—திட் டங்களின் மூலம் எதிர்பார்க்கும் தேவைகளைச் சமாளிக்க முடியும் என்பதும் எல்லோரும் ஒப்புக் கொள்வதாகும். ஆனால் திராவிட முன் னேற்றக் கழகம் காணும் குறை, தீட்டப்படும் திட்டங்களெல்லாம் வடநாட்டை வாழவைக்க மட்டுமே பயன்படுகின்றன, தென்னாட்டுக்குரிய பங்கு திட்டங்களில் கிடைக்கவில்லை என்ப தாகும்.

வடக்கு வளர்கிறது, வளர்க்கப்படுகிறது; தெற்கு தேய்கிறது, தேய்க்கப்படுகிறது.

இந்த உண்மையை நாம் பலதடவை புள்ளி விவரங்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறோம். இவற்றை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் தவிக்கும் சென்னை மந்திரி சபையினரும், ஐந்தாண்டுத் திட் டத்தையொட்டி தங்கள் திட்டத்தைச் சமர் பித்தனர். 400 கோடி ரூபாய் என்று அவர்கள் தயாரித்து அனுப்பிய திட்டம், வெட்டப்பட்டு, மறுக்கப்பட்டு, குறைக்கப்பட்டு, 190 கோடி யாக வாக்களிக்கப்பட்டு கடைசியாக 178 ரூபாய் அளவுக்கு, காமராசரின் திட்டம் தேய்ந்து கட்டெறும்புத் திட்டமாக திரும்பி வந்துள்ளது.

தென்னாடு என்றதும் திட்டங்கள் ஒன்றுக் குக் கால்பகுதியாகக் குறைக்கப்படுகிறது. திட்டத்தின் அளவு கருக்கப்படுகிறது. ஆனால் வடநாடு என்றால் போடப்படும் திட்டங்கள் வளர்ந்துகொண்டு போகின்றன.

தாமோதார் பள்ளத்தாக்குத் திட்டம் என் பது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம் பிக்கப்பட்டதாகும். அந்த மாபெரும் திட்டம் இன்னும் இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இடம் பெற்று வளரலாம். மாநிலத்தில் உருவாகும் திட்டம் எப்படி ஆண்டுக்கு ஆண்டு வளர்ந்துகொண்டே போகிறது பாருங்கள்.

1951-ல் முதலில் தாமோதர் பள்ளத்தாக்கு திட்டம் உருவாக்கப்பட்டபொழுது, அரசாங் கம் போட்ட திட்டம் 77 கோடி ரூபாய்.

1952-ல் ஐந்தாண்டு திட்டக்குழு கூடி பரி சீலனை செய்தபொழுது, தாமோதர் பள்ளத் தாக்குத் திட்டம் 88 கோடி ரூபாயாக உயர்ந்தது.

மாநில அரசாங்கங்களும், மத்திய அரசும் அமைத்த நிபுணர்கள் குழு திட்டத்தை ஆராய்ந்து, செம்மைப்படுத்தி, தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்திற்கு, 98 கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டும் என்று வரை யறுத்தார்கள்.

திட்டத்தின் வளர்ச்சி அத்துடன் நிற்க வில்லை. திட்டத்தைப் பொறுப்பேற்ற குழு வினர் மேலும் பல புதிய பகுதிகளைச் சேர்த்து மின்சார உற்பத்தியை அதிகரித்து, திட் டத்தை விரிவுபடுத்தினர். இப்பொழுது விரிவு படுத்தப்பட்ட தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் 103 கோடி ரூபாயாக இருக்கிறது!

திட்டங்களின் வளர்ச்சி, வட நாட்டின் வளர்ச்சி எப்படியிருக்கிறது! மொத்தத் திட்டம் அல்ல, குறிப்பிட்ட ஒரு திட்டம் மட்டும் நாளுக்கு நாள் வளர்ந்தபடி, விரி வடைந்தபடி இருக்கிறது. ஆனால் தென் னாட்டு மாநில அரசினர் அனுப்பும் ஐந்தாண் டுத் திட்டம் வெட்டப்பட்டு, அளவில் குறைக் கப்பட்டு விடுகிறது.

திட்டங்கள் விரிவடைகின்றன, அங்கே வடக்கில்!

77 கோடி ரூபாய்!
88 கோடி ரூபாய்!
98 கோடி ரூபாய்!
103 கோடி ரூபாய்!

வடநாட்டுத் திட்டம் வளர்கிறது, மத்திய அரசாங்கம் மறுப்பெதுவுமின்றி செலவிட

முன் வருகிறது. திட்டத்தின் அளவு உயர்ந்த படி இருக்கிறது. 77 கோடி ரூபாய் வகுக்கப் பட்ட திட்டம், 103 கோடி ரூபாயாக உருமாறு கிறது!

வடக்கு—தெற்கு என்று வாதிடுவது தவறு என்று வரட்டு வேதாந்தம் பேசிடும் தேசியத் திருப்பணியாளர்கள் அதோ! வடக் கில் வளர்ந்திடும், விரிந்து நாட்டை வளப் படுத்திடும் திட்டங்களைப் பார்த்துவிட்டு, தென்னாட்டில் குறிப்பிடத் தகுந்த திட்டம் எதையாவது விரல்விட்டுக் காட்ட முடியுமா?

"திட்டங்கள் தீட்டுகிறோம், வடநாட்டில் போடும் திட்டங்களில் லாபம் அதிகம் கிடைக் கும் என்று எதிர்பார்க்கிறோம். அதனால் இந்திய அரசாங்கம் வடநாட்டில்தான் திட்டங் களை உருவாக்கும்" என்று லாப நோக்கத் துடனாவது அரசாங்கம் திட்டங்களை நடத்து கிறதா? அப்படியும் சொல்ல முடியாது, அண் மையில் தாமோதர் பள்ளத்தாக்கு குழுவின் தலைவர் பூலன் பிரசாத் வர்மா என்பவர், திட்டத்தின் அடிப்படை நோக்கத்தைப் பற்றிக் கூறும்பொழுது, "இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. வளத்தைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது" என்று அறிவித்துள்ளார்.

திட்டத்தின் அளவு நூறுகோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்தாலும் பாதகமில்லை, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் இலாபமா? நஷ்டமா? என்றும் பார்க்கத்தேவையில்லை. எப்பாடுபட்டேனும், எவ்வளவு செலவானு லும், "வளத்தைப் பெருக்கவேண்டும்!" என்று திட்டங்களை வடநாட்டில் உருவாக்கு கிறார்கள்.

அதேசமயம், "அளவைக் குறைத்தாவது எங்கள் திட்டத்தை உருவாக்குங்கள்;" இந்தத்திட்டத்தில் இலாபமும் கிடைக்கும், நாட்டின் வளமும் பெருகும்!" என்று தென் னாட்டினர் சமர்ப்பிக்கும் திட்டங்கள் உருத் தெரியாமல் குறைக்கப்படுகின்றன.

இலாப நஷ்டத்தைப் பார்க்காமல், நாட்டை வளப்படுத்தவேண்டும் என்ற திட்டங்கள் வடநாட்டில் மட்டும் உருவாக்கப்படுவானேன்? வடநாடுமட்டும் வளம்பட்டால் போதும் என்ற எண்ணமா? எப்பாடுபட்டேனும் திட்டங்களை முடிக்கவேண்டும் என்று பள்ளத்தாக்குகளில் பணத்தைகொட்டி வடநாட்டை வளப்படுத்த, இந்தியப் பேரரசு முனைந்து நிற்கிறது!

தென்னாட்டில் ஒரு திட்டமென்றால், உடனே அதன் கண்கள் மங்குகின்றன, கரம் மடங்கு கிறது, பணப்பை உள்ளேசென்று விடுகிறது.

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தால் 27 லட்சம் ஏகரா நிலங்கள் வளப்படுத்தப் படுமாம். அதிலிருந்து வெளிப்படும் மின் சாரம் கல்கத்தா, பாட்னா, கயைவரை சென்று அந்தப்பகுதி முழுவதும் பயன்படும்.

77 கோடி ரூபாயில் முதலிலிருந்த திட்டத் துக்கு, 26 கோடி ரூபாய் கூடுதலாகக்கொடுக் கப்பட்டது. 103 கோடி ரூபாய் அமைப்பில் திட்டம் உருவாகிறது! அது வடநாட்டில்!

நூறுகோடி ரூபாய்க்குமேல் வடநாட்டுத் திட்டங்களைப் பெருமைப்படுத்தி பத்திரிகை கள் அறிவிப்புகளைத் தரும்பொழுது, தென் னாட்டுக்கு எத்தகைய செய்திகளைத்தருகின் றன?

"சென்னையில் அப்பள உற்பத்தி சாலை, மாநில சர்க்காருக்கு 1,30,000 கடன்"

வடநாட்டில் சிந்திரி உர உற்பத்திசாலை, சித்ரஞ்சன் ரயில் உற்பத்திசாலைபோன்று பல உற்பத்திசாலைகள் இருக்கின்றனவே? அதைப்போல, தென்னாட்டிலும் சில உற்பத்தி சாலைகளை மத்திய அரசாங்கம் தந்ததா? இல்லை. தென்னாட்டில் தொழிற்சாலைகள் எதுவுமில்லை என்று கூப்பாடு போடுபவர் களுக்குப்பதில் தருவதாக நினைத்துக்கொண்டு, அப்பள உற்பத்திசாலைக்கு மத்திய சர்க்கார் கடன்கொடுப்பதாக கைத்தொழில் மந்திரி அறிவித்திருக்கிறார்.

மத்திய பேரரசு தீட்டும் திட்டங்கள் வட நாட்டைத் தொழில்மயமான நாடாகவும், திரா விடத்தை எடுபிடி ஏவல்செய்யும் தாழ்மை நாடாகவும் செய்ய உதவுகின்றன. தொழிற் சாலைகள் என்றால் மிகப்பெரும் தொழிற் சாலைகள்.

104 கோடி ரூபாயில் பிலாய் இரும்பு— உருக்குத்தொழிற்சாலை,

33 கோடி ரூபாய் இந்துச்தான் உருக்குத் தொழிற்சாலை

27 கோடி ரூபாய் சிந்திரி உரத்தொழிற் சாலை

20 கோடி ரூபாய் பொறி கருவிகள் தொழிற்சாலை

15 கோடி ரூபாய் சித்தரஞ்சன் ரயில்வே தொழிற்சாலை

இவ்வாறு இருபதுகோடி, முப்பதுகோடி, நூறுகோடி என்று வடநாட்டில் தொழிற்சாலைகள் வளர்ந்தபடி இருக்கிறது, அதற்கு மாறுகத்தொழிற்சாலை என்ற பெயரில் தென்னாட்டில் அப்பளத்தொழிற்சாலை என்று உண்டாக்கப்படுகின்றன.

சென்னை மாநில சர்க்கார் அப்பளத்தொழிற்சாலைக்கு பெற்ற 1 லட்ச ரூபாய்கூட கடனாக!

இந்தக்கடன் தொகைக்கு மத்திய சர்க்காருக்குக்கூட மனுப்போட்டிருக்கத் தேவையில்லை. யாராவது மண்டிக்கடை செட்டியாரிடம் கேட்டிருந்தால் தந்திருப்பார்.

தென்னாட்டில் அப்பளத் தொழிற்சாலை! அதற்கு மத்திய சர்க்கார் மனமுவந்து அளிக்கும் ரூபாய் ஒரு லட்சம் கடன்! வெட்கக்கேடான செய்தி! பத்திரிக்கையில் படிக்கும் தென்னாட்டவர் எவரும் வேதனைகொள்ள வேண்டிய அறிவிப்பு!

ஒரு நாட்டின் வளம் அதன் தொழில் வளர்ச்சியில் இருக்கிறது! அணைத்திட்டங்கள், இரும்பு உறுக்கு, இயந்திரங்கள், உரத் தொழிற்சாலை வடக்கில் பெருகிடும்பொழுது தென்னாட்டில் அப்பளத் தொழிற்சாலைகள் உருவாகின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 3400 கோடி ரூபாய்கள் போடப்பட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5600 கோடி ரூபாய்கள் மூலதனமாகப் போடப்படும். பின் வரும் பெரும் பிரிவுகளில் அவை செலவழிக்கப்படும்.

பிரிவு	மூலதனம் ரூபாய்	மொத்த திட்டத்தில் விகிதம்
தொழில் துறை	1400 கோடி	25
கட்டப்படும் ஆக்க வேலைகள்	1350 ,,	24
விவசாயம் பாசனம்	950 ,,	17
போக்குவாத்து சாதனங்கள்	900 ,,	16
மின்சாரம்	500 ,,	9
பங்குகள்	500 ,,	9
	5600 கோடி	100

மேலே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைப் பார்த்தால், தொழில் துறை, கட்டப்படும் ஆக்கவேலை, இவை இரண்டில் மட்டும் 2750 கோடி ரூபாய்கள் போடப்படுகின்றன. அதாவது மொத்த திட்டப் பணத்தில் பாதி இந்த இரண்டு பிரிவுகளில் அடங்குகின்றன. இந்தப் பணத்தில் எவ்வளவு பங்கு திராவிடத்திற்குக் கிடைக்கப்போகிறது?

தொழில் முறை என்பது பெரும் பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது. 1400 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் அப்பகுதி, பெரும்பாலும் வடநாட்டில் பெரும்பெரும் ஆலைகளையும், தொழிற்சாலைகளையும், உற்பத்தி சாதனங்களையும் உண்டாக்கவே பயன்படப் போகின்றன. தொழில் முறைக்கு ஒதுக்கப்படும் 1400 கோடி ரூபாய் பின்வருமாறு பங்கு போடப்படுகின்றன.

	தொழில்	முதலீடு.	
1.	இரும்பு—உருக்கு	425	கோடி ரூபாய்
2.	பெட்ரோல்	80	,,
3.	கனரகத் தொழில்	240	,,
4.	ரசாயனம், சிமெண்டு	100	,,
5.	மாநிலத் திட்டங்கள்	50	,,
6.	உர உற்பத்தி	100	,,
7.	தொழிற்சாலை தேவைகள்	100	,,
8.	கைத்தொழில், வீட்டு வேலை,	200	,,
9.	அலுமினியம்	30	,,
10.	கனிப்பொருள்கள்—அவற்றைக் கண்டு பிடித்தல்	75	,,
		1400	,,

ஒவ்வொரு தொழில்வகையாகப் படித்துப் பாருங்கள்! கடைசியாக எந்தத் தொழில் முறையில் தென்னாட்டுக்குப் பங்கு கிடைக்குமென்று எதிர்பார்க்கிறீர்கள்! இரும்பு—உருக்கு தொழிற்சாலைகள் தென்னாட்டில் உருவாகுமா? உருவாகத்தான் டாடா முதலாளிகள் விடுவார்களா? மூன்று இரும்பு உருக்குத்தொழிற்சாலைகள் உண்டாக்கத் திட்டமிடப்பட்டன. அவற்றில் இரண்டு ரூர்கேலா, பிலாய் என்ற இடங்களில் அமைக்க முடிவு செய்யப்பட்டுவிட்டன. மூன்றாவது தொழிற்சாலையும் வடநாட்டில் உருவாகுமே யொழிய, தென்னாட்டில் நிச்சயமாக இருக்காது. சேலத்தில் இரும்பு கிடைக்கும் என்று கனிப்

பொருள் வல்லுநர் அறிவித்தாலும், அதை எடுக்க போதிய வசதிகள் கிடையாது என்று மந்திரி சபையினர் அறித்துவிட்டனர். வசதியிருக்கிறதா, இல்லையா என்பதை ஆராயத் தேவையில்லை, தென்னாட்டில் இரும்புத் தொழிற்சாலையை உண்டாக்க மத்திய சர்க்காருக்கு மனம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஒவ்வொரு பகுதியாகப் பார்த்தாலும், பெட்ரோல் (80 கோடி), கனரகத்தொழில் (240 கோடி), உரஉற்பத்தி (100 கோடி) ரசாயனப் பொருள்கள் (100 கோடி) இப்படி கோடிக் கணக்கில் போடப்படும் மூலதனங்கள் பெரும்பாலும் வடநாட்டை வளப்படுத்தவே பயன்படுகின்றன.

வடக்கு வளர்கிறது, தெற்கு தேய்கிறது.

ஆர்த்திடும் ஆலைக்கூட்டம், அடர்ந்த தொழிற்சாலைகள், ஆற்றை வளைத்து நாட்டை வளப்படுத்தும் பாசனத்திட்டங்கள் எல்லாம் ஐந்தாண்டு திட்டங்களினால் வடக்கில் உருவாகின்றன. அப்பளத் தொழிற்சாலை மட்டும் இங்கு உருவாகின்றன.

வடநாடு வளர்கிறது, வளர்ந்தபடி இருக்கிறது, வளம் குவிகிறது, திராவிடம் வறண்ட நாடாக—வடநாட்டாரின் அடிமைக் காடாக விளங்குகிறது.

திட்டங்களை உருவாக்கும் உரிமை, டில்லி ஆதிபத்தியத்திடமிருக்கிறது. திட்டங்களை உருவாக்குவதற்கான பணம் அவர்களிடமிருக்கிறது. பணமென்றால், மாநில மக்கள் எல்லோரிடமிருந்தும் வாங்கி மத்திய சர்க்காரின் பணப்பெட்டியில் சேர்க்கப்படும் வரிப் பணம்தான்! வரிப்பணத்தில் பெரும் பகுதியை டில்லிக்குக் கொட்டியளந்துவிட்டு, மாநில அரசுகள்வாயில் விரலை வைத்துப்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றன. மத்திய அரசாங்கம் மனம்வைத்தால் தான் மாநிலங்கள் வளரமுடியும், வாழமுடியும் என்ற நிலை!

அதிலும் சென்னை மந்திரிசபையின் திறமை யாவருக்கும் தெரிந்ததே! மத்திய அரசாங்கம் இல்லையென்று கைவிரித்தால், இந்த மந்திரிகள் சரி யென்று பல்லிளித்துக்கொண்டு வந்து விடுவார்கள். வடநாட்டில் நூறு கோடி, இருநூறுகோடி ரூபாய்கள் மிக்ப்பெரும் திட்டங்கள் வரும்பொழுது, "தென்னாட்டில் அப்பளத்தொழிலுக்கு ஒரு லட்சம் அதுவும் கடன் என்ற அளவில்தான் சென்னை மந்திரிகளால் பெறமுடிகிறது! இப்படி மந்திரிகளாக இருப்பதைவிட, எங்கேயாவது முக்காட்டு உட்கார்ந்துகொண்டு அப்பளம் போட்டுக்கொண்டிருக்கலாம்! அவர்களுடைய பேச்சும், வீராப்பும் அப்பளம்போடும் இடத்துக்கு அதிகம் பயன்படும்!

கேள்விக்குக் கேள்வி

ஒரு துரையும் துரைசாணியும் ஒருநாள் மாலை ஒரு பெரிய காரில் ஒரு ஹோட்டலுக்கு வந்தார்கள். காரைவிட்டு இறங்கிவந்து ஹோட்டல் முதலாளியிடம், "ஹோட்டலில் அறை ஏதும் தங்குவதற்கு இருக்கிறதா?" என்று அந்தத் துரைசாணி கேட்டாள்.

"இருக்கிறது" என்று முதலாளி கூறினார்.

"அப்படியானால் அதைப் பார்க்கவேண்டுமே!" என்று அந்தத் துரைசாணி கூறினாள்.

ஹோட்டல் முதலாளி அவர்களை அழைத்துக்கொண்டுபோய் அறையைக் காட்டினார். துரைசாணிக்கும் முதலாளிக்குமிடையே சிறிதுநேரம் உரையாடல் நடைபெற்றது. பிறகு துரைசாணியும் துரையும் ஹோட்டலை விட்டு வெளியேறிக்காரில் போய்விட்டனர்.

முதலாளி தன் இருக்கையில் வந்து உட்கார்ந்தவுடன், "ஏன் அந்த அம்மையார் இங்குத் தங்கவில்லையா? என்று உடனிருந்த நண்பர் ஒருவர் அவரைக் கேட்டார். "இல்லை!" என்றார் நண்பர். "ஏன்?" என்று கேட்டார் நண்பர்.

"நான் அந்த அம்மையாரிடம் அறையைக் காண்பித்தேன். 'அறையிலுள்ள துணிகளை நாள்தோறும் மாற்றுவீர்களா?' என்று அவர்கள் கேட்டார்கள். 'மாற்றுவோம்' என்று நான் விடையிறுத்தேன். பிறகு "மூட்டைப் பூச்சிகள் உண்டா?" என்று கேட்டார்கள். நான் "இல்லை" என்றேன். பின்னர் நான் அந்த இரண்டு கேள்விகளையும் அவர்களிடம் திருப்பிக் கேட்டேன். அவர்கள் இங்கே தங்க இயலாது என்று போய்விட்டார்கள்," என்று முதலாளி கூறினார்.

(42)

பிரமா எப்படியிருந்திருப்பார், உருவத்தில்? யாரும் பார்த்ததில்லை, அதனால் யாராலும் சொல்ல முடியவில்லை. ஆனாலும் ஓவியந் தீட்டுபவர்களின் உதவியால், பிரமாவின் உருவம் அமைக்கப்படுகிறது. தாமரையில் நான்முகன் அமர்ந்திருக்க, பக்கத்தில் ஒரு வெள்ளைத்தாமரையில் வீணை தாங்கி, வெள்ளைக்கலையுடுத்தி, சரசுவதி உட்கார்ந்திருப்பாள். ஓவியரின் திறமை, பெரும்பாலும் சரசுவதியின் உருவத்தை அழகுபடத்தீட்டுவதில் செலவழிக்கப்பட்டிருக்கும். பிரமாவின் உருவத்தை எங்கேயாவது பார்த்தால், வாட்டசாட்டமாக, முகங்கள் பளபளப்புடன் மின்ன, தேவரூபமாய் உட்கார்ந்திருப்பது தெரியும். ஆனால் புராணக்கதைகளில் பார்த்தால், அவருக்கு நீண்டு அடர்ந்த தாடி இருந்திருக்கவேண்டும். தாடியை வைத்துக்கொண்டதால், அவர் அவதிப்பட்டாரென்பது கதை.

தேவேந்திரன் தனக்கு நிகர்யாருமில்லை என்ற இறுமாப்புடன் வாழ்ந்துகொண்டிருந்தான். வழக்கமாக அசுரர்களால் உதைபட்டு, அடிபட்டு ஊரைவிட்டு ஓடி ஒளிந்து, சிவனோ திருமாலோ உதவிக்கு வரும்வரை மறைந்துவாழும் தீரன், அவன். ஆனாலும், இந்தக்கதையில், அசுரர் தொந்தரவு இல்லாமல் இருந்தான்போலும். மிகக் கர்வத்துடன், அவன் ஒருநாள் கைலயங்கிரிக்கு வந்தான். எப்பொழுதும் அழுதுபுலம்பிக் கொண்டு வரும் தேவலோகவரசன் இன்று மிக ஆடம்பரத்துடன், வருவது கண்டு சிவபெருமான் ஆச்சரியமடைந்தார். வரும் இந்திரனின் பலத்தைப் பரிசோதிக்க எண்ணி, சிவன் ஒரு பூதவடிவாய் கைலைவாயிலில் காத்து நின்றார். மிக ஆங்காரத்துடன் வரும் இந்திரன் வாயிலை அடைந்ததும், பூதம் அவன் முன்நின்றது.

"எட்டி நில் பூதமே!"

பூதம் பேசாமல் இருந்தது. வழி அகலவில்லை, இந்திரனுக்குக் கோபம்வந்தது, "ஏடா! மூடா! நான் யார் தெரியுமா? தேவலோக அரசன், இந்திர பதவியிலிருப்பவன், தேவேந்திரன்!"

பூதம் அப்பொழுதும் நகராமல் இருந்தது. இந்திரன் கோபத்துடன் உற்றுப்பார்த்தான். பூதமும் திரும்ப உற்றுப்பார்த்தது. பூதத்தின் பார்வை இந்திரனுக்கு பயத்தை உண்டாக்கியது. பூதத்தின் கோபப்பார்வையைக் கண்டதும், இது சாதாரணமான பூதமல்ல, சிவபெருமானின் மர்மவுருவம் என்பது இந்திரனுக்குத் தெரிந்தது. பின் நடுக்கத்துடன் பூதத்தின்முன் மண்டியிட்டு, பிழைபொறுக்கும்படி இந்திரன் வேண்டிக்கொண்டான். சிவபெருமான் இந்திரனை மன்னித்தார். ஆனாலும் அவர்கொண்ட கோபப்பார்வை என்ன ஆவது? எதன்மீதாவது அந்தப் பார்வையைச் செலுத்தினால்தான், கோபம் அடங்கும். சிவபெருமானின் கோபப்பார்வை எதன்மீதுபட்டாலும், அது அப்படியே சாம்பலாகிவிடும். ஆதலால் மற்றப் பொருள்களின் மீது காட்டினால் ஆபத்து என்று கடலின்மீது தனது கோபப்பார்வையைச் சிவபெருமான் செலுத்தினார். சிவபெருமானின் பார்வை, கடலில்பட்ட இடத்தில் ஒரு குழந்தை பிறந்தது! அந்தக் குழந்தை சலந்தராசுரன் என்ற பெயரில் வளர்ந்தது.

பிரமதேவன் அந்தக்குழந்தையைப் பார்க்கச் சென்ருர். விளையாடிக்கொண்டிருந்த குழந்தை பிரமதேவரின் தாடியைப்பிடித்து இழுத்த தாம். குழந்தையிடமிருந்து மீளும் வகையறியாமல், பிரமதேவர் "ஓ"வென்று அலறினர். எவ்வளவு சத்தமிட்டும், முயன்றும் குழந்தை பிடித்த பிடியை விடவில்லை. குழந்தையின் பலத்துக்கு ஈடாக, பிரமா நிற்காமல் தவித்தார். கடைசியாகப்பலர் ஓடிவந்து, குழந்தையைப் பிரித்தார்கள். பிரமாவின் தாடியில் பாதி குழந்தை கையுடன் போயிற்று!

எல்லாவற்றையும் ஆக்கவல்ல முதற் கடவுள், அவர் சிறுகுழந்தைகளிடம் அவதிப்பட்டிருக்கிருர். சலந்தராசுரனிடம் பலங்குன்றி இருந்ததுபோலவே, குமரக்கடவுளிடமும் பிரமா வலிவிழந்து நின்ருர். சிவபெருமானைப் பார்க்க, தேவர்களுடன் பிரமாவும் ஒருசமயம் சென்ருர். மற்ற தேவர்கள் சிவபெருமானை வணங்கிப்பின், அவரது மகன் கந்தமூர்த்தியையும் வணங்கிச்சென்ருர்கள். பிரமாமட்டும் சிவமூர்த்தியை மட்டும் வணங்கி, குமாரக்கடவுளை வணங்காமல் திரும்பினர், தன்னை மதிக்காததுகண்ட குமாரக்கடவுள், பிரமதேவரை வழிமறித்து "உமது தொழில் என்ன?" என்று கேட்டார்.

சிறுபயல் கேட்கிருன் என்று பிரமா சிரித்து "வேதங்களை நான் உண்டாக்கினேன், வேதங்களின்படி உலகங்களை அமைக்கிறேன், படைப்புத்தொழில் என்னிடமிருக்கிறது" என்ருர்.

சிறுவனை குமாரக்கடவுள் விடவில்லை. "வேதங்களை உண்டாக்கியதாகச் சொல்கிறீரே! வேதங்களுக்கு ஆதியாக உள்ளது எது?"

"இதுகூடத்தெரியாதா, பிரணவம்!" என்று பிரமா வேடிக்கையாகப் பதில் சொன்ருர்.

"அந்தப்பிரணவத்தின் பொருள் என்ன?" என்று குமாரக்கடவுள் கேட்டார்.

பிரமாவுக்குப் பதில் தெரியாமல், விழித்தார்.

மூத்தகடவுள் பிரமா, சின்னக்கடவுள் கந்தமூர்த்தி. இருவரும் கடவுள்களென்ருலும், அவர்களுக்குள் தெரிந்தவன், தெரியாதவன், புத்திசாலி, மண்டு, என்று குறைபாடுகள் இருந்தன. தான் கேட்டதற்கு, நான்முகன் பதில் சொல்லாமற்போக, கந்தமூர்த்திக் கோபித்து அவரை அருகழைத்து தலையில் பலமாகக்குட்டினர். பதில் தெரியாமல் அவமானமடைந்ததுபோக, தலையில் குட்டுப்பட்டு பிரமா அவதிப்பட்டார். கந்தமூர்த்தி அத்துடன் விடவில்லை. பிரமாவைப் பிடித்துப் போய் சிறையில்போட உத்தரவிட்டார். பிரமாவும் சிறைக்குள் கிடந்தார். கடைசியாகச் சிவபெருமான் பார்த்து, இரக்கப்பட்டு, பிரமனை விடுவிக்கச் செய்தார்.

மற்றக்குழந்தைகளைவிட, அவருடைய குழந்தைகளே பிரமாவுக்கு மிக பயத்தைத் தந்திருக்கின்றன. ஒருசமயம் பிரமா நன்ருகத் தூங்கிக் கண்விழித்து, நீண்ட கொட்டாவி விட்டார். கண்விழிக்கும்போது என்ன கனவு கண்டாரோ, யாரைக்கனவுலகில் அணைத்து மகிழ்ந்துகொண்டிருந்தாரோ, கண்விழித்துக்கொட்டாவி விட்டதும் ஒரு குழந்தை பிறந்து எதிரே சத்தமிட்டது. கண்ணை விழித்து, அழும்குழந்தையைப் பார்த்து "யாரப்பா நீ?" என்று பிரமா கேட்டார்.

"நான் உங்களுடைய கொட்டாவியில் பிறந்தவன்."

"குழந்தாய்! சிந்துரன் என்று உனக்கு பெயரிடுகிறேன்,! நீ நன்கு வாழ்வாயாக!" பிரமா ஆசிர்வதித்தார்.

"அப்பா! எனக்கு ஒரு வரம் வேண்டும்." பிள்ளை கேட்டது.

"கேள், தருகிறேன்!"

"யாரை நான் தழுவினுலும், அவர்கள் இறந்துவிடவேண்டும்."

"தந்துவிட்டேன், யாரை நீ தழுவினும் அவர்கள் இறந்துவிடும்படியான வலிவு என் வரத்தால் உனக்கு இருக்கிறது."

"நீங்கள் கொடுத்தவரம் உண்மையானதா, எனக்கு வலிவு வந்துவிட்டதா?"

"பேதைப் பையனே! பிரமதேவனுகிய நான் கொடுத்த வரம் பொய்யாகாது. வரத்தால் உனக்கு வந்துள்ள வலிவைப்பற்றிச் சந்தேகிக்க வேண்டாம்."

வரம்பெற்ற சிந்துரன் இன்னும் சந்தேகித்தான். "வரம் கேட்டதும், வரம் தந்ததும் உண்மை! முழுவலிவும் கிடைத்திருக்குமா என்பது பரிட்சித்துப் பார்த்தால்தான் தெரியும்."

"ஆமாம்! பரிட்சித்துப் பார்! உன்னல் தழுவப்பட்டவன் எவனும் உடனே இறந்துவிடுவான். இது நிச்சயம்!"

"அப்படியானால் இப்பொழுதே பரீட்சித்துப் பார்க்கிறேன்!"

"நன்றாகச் செய்து பார்!"

சிந்துரன் பிரமா அருகில் வந்தான்.

"உங்களை நான் தழுவுகிறேன்! எனக்கு நீங்கள் கொடுத்த வரம் சரியானதா அல்லவா என்று பார்த்துவிடலாம்."

பிரமா திகைத்தார். "நான் உயிர் கொடுத்தேன். இவன் என் உயிரை வாங்கப் பார்க்கிறான்!"

சிந்துரன் தழுவ வந்தான். வரங்கொடுத்து விட்டுத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையன்றி பிரமா பயந்து ஓடினார். சிந்துரன் துரத்திக்கொண்டு பின்னால் ஓடிவந்தான். பிரமலோகத்தைவிட்டு ஓடி, சிவலோகத்துக்கு வந்து, சிவபெருமானிடம் பிரமா அடைக்கலம் புகுந்தார். சிவனைக்கண்டு அஞ்சிய சிந்துரன் பிரமாவைவிட்டுத் தேவலோகத்துக்கு வந்தான், பூலோகத்திற்குச் சென்றான். அவனால் தழுவப்பட்ட முனிவர்கள் மறுகணம் உயிரிழந்து கிடந்தார்கள். தேவமங்கையர் செயலற்று மஞ்சத்தில் வீழ்ந்தனர். வரம்தந்த வலிவால் தேவர்களையும் தபோதனர்களையும் சிந்துரன் ஆட்டிப்படைத்தான். எதிர்ப்படுபவர்களையெல்லாம் மிரண்டோடச்செய்து, இறுமாப்புடன் அவன் இருக்கும்பொழுது, ஒரு அசரீரி "சிவபெருமானுக்குப் பிறக்கும் குழந்தை உன்னைக் கொன்றுவிடும்!" என்று அவன் காதில் மெல்லச் சொல்லியதாம். உடனே காற்றுருவாக சிந்துரன் பார்வதி தேவியின் வயிற்றில் புகுந்து, அங்கு வளர்ந்த சிசுவின் தலையை அறுத்து, ஒரு ஆற்றில் விட்டான். அந்தத் தலை நதியில் படிந்து, விநாயக குண்டம் என்று பெயர்பெற்றது. பின் வேறொரு தலையுடன் விநாயகர் பிறக்க, சிந்துரன் யுத்தத்திற்கு வந்தான்.

குழந்தையாயிருந்த விநாயகரைத் தழுவிக் கொள்ள வேண்டுமென்று சிந்துரன் முயன்றான். தனக்குள்ள வரத்தின் பலனால், தழுவப்பட்டதும் விநாயகர் இறந்துவிடுவார். ஆனால் குழந்தை விநாயகர் அவன் பிடிக்குள் அகப்படாமல் தள்ளிப்போய், கடைசியாக அருகில் வரும்பொழுது சிந்துரனை தன் ஒருகைக்குள் பிடித்து நசுக்கிவிட்டார். வழிந்த ரத்தத்தைத் தன் நெற்றியில் திலகமாக இட்டுக்கொண்டு, முன்போல் விளையாண்டாராம்.

சிந்துரன் இறந்தான் என்று கேள்விப்பட்டதும்தான் பிரமாவுக்கு உயிர்வந்தது. பயம் நீங்கி, தைரியமாக நடமாட அவர் ஆரம்பித்தார்.

சிந்துரனைக் கொன்று, தனக்கு வரவிருந்த ஆபத்தை நீக்கியதற்காக விநாயகரிடம் பிரமா நன்றி பாராட்டாமலில்லை. சித்தி, புத்தி, என்ற இரு குமரிகளை உண்டாக்கி, விநாயகருக்கு உரிய காலத்தில் அவர்களைப் பிரமா தந்தார்.

ஒவ்வொரு கற்பத்திலும் பிரமா இறந்து பின் விட்டுணுவின் குமரராய்ப் பிறப்பார். பிரமா வேதங்களையும், வேதத்தின்படி சிருட்டியமைப்பையும் உண்டாக்குகிறார். வேதங்களையும், வேத வொழுக்கங்களையும், அண்டசராசரங்களையும் உண்டாக்கினபிரமதேவர் மாபாதகங்கள் என்று சொல்லத்தக்க எதையும் கைவிட்டதாகத் தெரியவில்லை. காமத்தில் கரைகண்ட நிபுணராக அவர் இருந்தார். மகளாயிருந்தாலும் தங்கையாயிருந்தாலும், மாதா முறையென்றாலும் மாற்றார் மனைவியென்றாலும், பிரமாவின் காமக்கண்கள் எதையும் தடையாகக் கருதியதில்லை. மகளை மனைவியாக்கினார், தங்கையான உருப்பசியின் நடனங்கண்டு அவளைத் தாரமாகப் பெற விரும்பினார். அவர் நடத்திய காம விளையாட்டுகளில் ஆயிரத்தில் ஒரு பங்கு பூலோகத்தில் ஒருவன் செய்தால், பாவமென்று சொல்லி, நரகங்களில் தள்ளப்பட்டிருப்பான். காய்ச்சிய இரும்புத் தூணை அணைந்துகொள்ளவேண்டும், கொதிக்கும் நெருப்புக்குண்டத்தில் விழவேண்டும். நரகவாதனைகள் பல இருக்கும். ஆனால் மனிதரில் கடை கெட்டவனும் எண்ணக் கூசும் கடைத்தர காமக்கேடுகளைப் புரிந்த பிரமா மட்டும் கடவுளாக என்றென்றும் இருக்கிறார். நெருப்புக்குண்டத்தில் தள்ளப்படவில்லை; தாமரைப்பூவில் உட்கார்ந்திருக்கிறார். பழுக்கக் காய்ச்சிய இரும்புத் தூணின் பக்கத்திலல்ல, மகளென்ற முறை மாற்றப்பட்டு மனைவியான சாரதையின் பக்கத்தில், அவளை அணைத்துக் கொண்டு, அவர் இருக்கிறார்.

அவர் சொன்னது பொய், தயாரித்தது பொய் சாட்சி! ஆனால் இருக்கும் உலகத்தின் பெயர் சத்திய உலகம்!

ஒழுக்கக் கேடுகள் நிரம்பியவர், ஆனால் உலகுக்கு ஒழுக்கங்களை உபதேசிக்க வந்தார், வேதாகமங்களை இயற்றினார், உயிர்களைப் படைத்தார்.

பிரமா இருக்கும்படியான சத்தியலோகம் 1600 கோடி மைல் உயரமுள்ளது புராண அளப்பில். அதன் உயரம்மட்டும் குறிப்பிடப் பட்டிருக்கிறதேயன்றி, நீள அகலங்கள் குறிக்

கப்படவில்லை. சத்தியலோகத்தில் எங்கும் வேதவொலி நிறைந்திருக்குமாம். எந்நேரமும் யாகம் செய்தபடி இருப்பார்களாம். ஓமப்புகை எழுந்து எங்கும் பரவியிருக்கும்; நாரதர் முதலிய முனிவர்கள் சுற்றிவந்து கொண்டிருப்பார்கள். அந்த உலகத்தில் தாமரை ஓடைகள் அதிகமிருக்கும். மலர்களும், கனிகளும் நிரம்பிய சோலைகள் நிறைந்திருக்கும். மந்தமாருதம் வீசும், பறவைகளும், வண்டுகளும் பறந்து ரீங்காரம் செய்தபடி இருக்கும். இந்த உலகத்தை வேத ஒழுக்கங்களைக் கடைபிடித்துக் காப்பாற்றி வருகிற பிராமணோத்தமர்கள் அடைவார்களாம்.

சத்தியலோகத்தின் மத்தியில் பிரமதேவர் எழுந்தருளியிருப்பாராம். அவருக்குக் கிழக்குப் பக்கத்தில் இருக்கு வேதம் நின்றுகொண்டிருக்கும். இருக்குவேதம் நீலநிறமுடையதாம். வடக்கில் வெள்ளை நிறமான எசுர்வேதமும், மேற்கில் பச்சை நிறமான சாமவேதமும், தெற்கில் கருப்பு நிறமான அதர்வணவேதமும் நிற்கும். இவையன்றி, இதிகாசங்கள், புராணங்கள், முதலியவைகளும் வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வ மிமாம்சை, உத்தரமிமாம்சை, என்ற ஆறு சாத்திரங்களும் ஆங்காங்கு நின்றுகொண்டிருக்கும்.

பிரமா பொன்னையொத்த மேனியராய், தாடி மீசைகளுடன், உட்கார்ந்திருப்பார். அவருடைய நான்கு திக்குகளைப் பார்த்துக்கொண்டிருக்கும். நான்கு கைகளில், ஜபமாலை, தண்டாயுதம், ஓமபாத்திரம், கமண்டலம் இருக்கும். அவருடைய பக்கத்தில் சரசுவதி அமர்ந்திருப்பாள்.

சரசுவதி வெள்ளை நிறமுடையவள், வெள்ளையாடை பூண்டு வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள். இவளுடைய நான்கு கரங்களில், செபமாலை, புத்தகம், வீணை, எழுத்தாணி இருக்குமாம். நான்கு வேதங்களும் அவளுடைய நான்கு கைகள், எண்ணும் எழுத்தும் அவளுடைய கண்கள், சங்கீதமும் சாகித்தியமும் அவளுக்குத் தனங்கள். சாத்திரம் வயிறு, புராண இதிகாசங்கள் காலடிகள், இவ்வாறு சரசுவதியின் உடலின் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொருவகை வித்தையாலும், ஆசாரத்தாலும் ஆனவை. மற்ற மானச புத்திரர்கள் உண்டானதைப்போல, பிரமாவின் மகளாக சரசுவதி உண்டாகினாள், சரசுவதியின் பிறப்பு வேறுவிதமாகவும் கூறப்படுகிறது.

சிருட்டி செய்யத் தொடங்கிய பிரமா ஆண்மக்களை யெல்லாம் படைத்துப் பெண்களைப் படைக்கத் தெரியாது திகைத்துப்போய், சத்தியை வேண்டிக்கொண்டாராம். சத்தி பிரமதேவன் முன்தோன்றி, "உனது இடதுபாகத்தைப் பிரித்து வைத்து, பெண்ணாக ஆக்கு! பின் அதனைப் பார்த்து மற்ற பெண்களை உற்பத்தி செய்ய முடியும்" என்று கூறி மறைந்தாள். பிரமா தனது இடது பாகத்திலிருந்து சரசுவதியை உண்டாக்கி, பின் அந்த உருவத்தைப் பார்த்து, பெண்களை உலகத்தில் சிருட்டி செய்தார்.

வேறொரு கதையில், சரசுவதி ஒரு கலசத்துக்குள் பிறந்ததாகக் கூறப்படுகிறது, அகத்தியர் பிறந்ததைப்போல.

......மச்ச புராணம் விட்டுணு புராணம் போன்றவைகளில் பிரமபத்னியாக முதலில் மகளாக இருந்தாலும் பின்பு மனைவியாக சரசுவதி கூறப்படுகிறாள். ஆனால் பாகவதத்தில், விட்டுணுவின் மனைவிகளில் ஒருத்தியாக சரசுவதி சொல்லப்படுகிறாள். மகாவிட்டுணுவுக்கு லட்சுமி, கங்கை , சரசுவதி மூன்று பேர்களும் மனைவிகளாம். இரண்டு பெண்டாட்டிக்காரன்பாடு திண்டாட்டமென்பார்கள். அதிலும் மூன்று மனைவிகள் இருந்தால் கேட்க வேண்டுமா? மூன்று மனைவிகளுக்குள் இளையவளான கங்கையிடம் விட்டுணு அதிக மோகத்துடன் இருந்தாராம். இது சரசுவதிக்குப் பிடிக்கவில்லை, ஒருசமயம் மூன்று மனைவிகளும் நன்றாக இருந்தபோது, அங்குவந்த விட்டுணு கங்கையுடன் ஆசையுடன் உரையாடியதன்றி, அவளைப் பார்த்து அடிக்கடி புன்னகை செய்தபடி இருந்தார், இதைக் கண்டு பொறுமைகொண்ட சரசுவதி, லட்சுமியைப் பார்த்து தனது கோபத்தைத் தெரிவித்தாள், லட்சுமியும் தன்னுடன் சேர்ந்து கோபிப்பாள் என்று சரசுவதி எதிர்பார்த்தாள். ஆனால் சரசுவதியின் பொறுமையும் கோபமும் லட்சுமிக்கு மகிழ்ச்சியை அளித்தன. அவள் கங்கை பக்கம் இருந்தாள், சரசுவதியைப் பார்க்காதுபோல் அலட்சியமாக இருந்தாள். சரசுவதியின் கோபம் இன்னும் அதிகமானது, லட்சுமியைப் பார்த்து "நீ நதியாகப் போகக் கடவது" என்று சாபமிட்டாள்.

★

தாய்க் கிழவியின் பெருமகிழ்ச்சி

[மு. க. இளந்திரையன்]

★

வானத்தை முட்டும் மாளிகையல்ல;
மானத்தின் உறைவிடம், மண்குடிசை! வாயிலில்
கூனற்கிழவி தாயம் ஆடிக்கொண் டிருந்தாள்,
அவ்வேளையிலே அதிர்ந்தது முரசம்; எழுந்தது
வள்ளுவன் ஒலி, "நாட்டின் நாயகரே! பெரியோரே!
களம் கண்ட காளையரே! திணவெடுக்கும் தோளுக்கு
விருந்து அமைத்து விட்டனன் பாண்டி மன்னன்;
போர்முகம் நோக்கிப் புறப்படுக!" என்றனன்
தாயமாடிய தாய்க்கிழவி நிமிர்ந்தனள், கவலே
முகத்தில் தோய்ந்தது! பின் குறுநகை மலர்ந்தது
உலர்ந்த உதட்டில்! கவலே தீர்ந்தனள்; தன்
வாழ்வின் செல்வத்தை, அன்பின் கொழுந்தை
அழைத் தனள்! அள்ளி அணைத்தனள்!
முத்தம் கொடுத்தனள் கண்ணுடிக் கன்னத்தில்!

கொடுவாள் தன்னைப்பிஞ்சுக் கையில் கொடுத்தே
கூறலுற்றனள், "முதன்முதல் உற்ற செருவில்உன்
பாட்டன் வீரம்விளைத்து வீழ்ந்தனன் களத்தில்!
அடுத்துற்றப் போரில் நின் தந்தை யானை
யெறிந்து களத் தொழிந்தனன்! இன்றும்
செருப்பறை கேள்நீ:! வீரம்தோய்ந்த நம்
வரலாற்றில் களங்கம் சேர்க்காதே! களம்
நோக்குக! வாள் சுழற்றி எதிர்ப்பட்டவரின்
உடலம் சாய்த்துத் திரும்புக! அன்றேல்
ஈட்டிக்கு மார்புகாட்டி மறவர் மரபை
விளக்குக!" என்றதும், அந்தக் களங்
காணுச் சிறுவன் கையில் வாளேந்தி
வாழ்வின் முடிவைக் காணச் சென்றனன்!

* * *

விளைந்த குருதியை வானத்தில் அள்ளித் தெளித்து
மேற்கு வானில் செங்கதிரோன் மறைந்தான்;
மாலே திரும்பும் காளேகள்போல் திரும்பினர்
வெற்றி வீரர்கள் பீடுநடை போட்டு!
குந்திய கிழவியும் உசாவினுள் தன்
மைந்தனைக் குறித்து, "செத்தான் உன்
மைந்தன் களத்தில்" என்ருன் ஒருவன்
செத்த செய்தியைக் கேட்ட தாய்

கிழவி கலங்கின ளல்லள்; கதறினளல்லள் ;
வீரம் விளையாடும் முகத்தாள் வினவினள் ;
" காயம் மார்பிலா முதுகிலா ?" வென்று
" களம்பல கண்ட நான்அவன் செத்த
விதம் செப்ப சித்தம் சோர்கிறேன் பாட்டி !"
என்றான் என்றதும் அந்தக் கிண்டலுக்குப்
பெயர் போனதமிழ்த் தாய்கேலி புரிந்தனள்
அவன் வீரத்தை ! " தம்பி! என் மகன்செத்தான்
களத்தில் ! எப்போதும் வாழ்வான் வீரனாய் !
என்மகனுக்குக் காயம் எங்கே ?" என்றதும்
" முதுகில் " என்றான்; அவள்மானங் கொன்றான்.

* * *

" வீரம்பல விளைத்து யானைபல கொன்று
கோட்டம் பல இடித்து வீரனாய் செத்தான்
என் ஆசை அத்தான்! அந்த மலைத்
தோளனுக்குப் பிறந்த புதல்வனா இவன்?
சாதல்நேரினும் மானங்காத்த மரபினனா இவன்?
தாலாட்டி, சீராட்டிப், பாலூட்டி வளர்த்தேன்
இந்தக் கோழையை! ஐயகோ!! நினைத்தால்
நெஞ்சங் கொதிக்கிறது; இந்த மானங்
கெட்டவனைப் பெற்றவள் ஒருமாவீரன் மனைவி!
கேட்போர் சிரிப்பர்! வேல் பாய்ந்தாலும்
கண்ணிமைக்காத மறவர் பரம்பரையினனா?
இமயக் கல் கேட்டால் சிரிக்குமே!
காவிரிக் கரையைத் தலைகுனியச் செய்த
இந்தத் தறுதலைக்குப் பால்கொடுத்த என்
முலையை அறுத்தெறிவேன் பாய்ந்த வேல்
முதுகிலென்றால்" என்று கூறி படுகளம் நோக்கி
முடுக்கினள் வேகத்தை! உருண்ட தலைகள்
ஒடிந்த கைகள்ஓடிய குருதிவெள் ளம்இவை
கண்டனள் களத்தில்! பெருமூச் செறிந்தனள்;
தாயகத்தைக் காக்கத் தலையைத் தந்த
தீரருக்குத் தலை வணங்கினள்; பின்
பொதிந்திருக்கும் புதையலைத் தோண்டி எடுப்பதுபோல்
பிணக் குவியலில் பொதிந்திருக்கும் புதல்வனை
எடுத்தனள், வாள்தந்த பரிசை மார்பில்
தாங்கி யிருக்கும் தன்மைந்தனைக் கண்டனள்!
இன்பங் கொண்டனள் ஈன்றபொழுதினும் மிகவே!

கடவுள் என்பது கற்பனை

★

மதக்காரர்களெல்லாம், எதிர்வினாக்களிலிருந்து எளிதாகத் தப்பித்துக்கொள்வதற்காக, 'கடவுள்' என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டிய இன்றியமையாமை இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். நாம் அதனைத் தெரிந்துகொள்ளாமலே வணங்கவேண்டும் என்கிறார்கள். அவருடைய பண்புகளைப் பற்றி ஆராய்வது குறும்புத்தனம் என்றும், அவைகளைப்பற்றி ஆராய்வதற்கு நமக்கு எவ்வித உரிமையுமில்லை என்றும் சொல்லுகிறார்கள். அப்படியே அவரைத் தெரிந்துகொள்ளாமலே வணங்கவேண்டுமென்று வைத்துக்கொண்டாலும், அவர் இருப்பதைப் பற்றியாவது நாம் உறுதியாகத் தெரிந்துகொள்ள வேண்டாமா? மேலும் அவரைப் பற்றிச் சொல்லப்படும் முரண்பாடான பண்புகளெல்லாம், அவரிடம் பொருந்தியிருக்க முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்வதற்கு முன், அவர் இருப்பதைப்பற்றித் திட்டவட்டமாக எப்படிக் கூறமுடியும்? ஆகவே உண்மையைக்கூறவேண்டுமானால், கடவுளை வணங்குவது என்பது தன் மூளையின் கற்பனையை வணங்குவதேயாகும் அல்லது, வெறும் சூன்யத்தை வணங்குவதாகும்.

நாத்திகமே சரி

பொருளை இன்னும் குழப்பத்தில் விடுவதற்காக ஆத்திகர்களெல்லாம் கடவுள் என்ன என்பதைப்பற்றித் தாங்கள் ஒன்றும் திட்டவட்டமாகச் சொல்லாமல் இருப்பதே மேல் என்ற முடிவுக்குச் சில பொழுதுகளில் வந்துவிடுகிறார்கள். எதிர்மறைகளாலும் மனக்கற்பனைகளாலும் சொல்லுகின்ற ஒன்றை உண்மையானது என்றும், முழு நிறைவானது என்றும் தாங்களாகவே நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் இப்பொருள் அவர்களுடைய மனக்கற்பனையே ஒழிய வேறில்லை என்பது நன்கு விளங்கும். ஒரு ஆத்மாவுக்கு உடல் என்பது கிடையாது. எல்லையுடையது என்பது எல்லையுடையதாக இருக்கமுடியாது. முழு நிறைவானது என்று சொல்லப்படுவது, குறைவாய் இருக்கமுடியாது. ஆகவே எண்ணிறந்த குறைகளையுடைய ஒன்றைப்பற்றியாவது, பொருள் சூன்யமாய் இருக்கும் ஒன்றைப்பற்றியாவது, யாராவது ஒரு உண்மையான கருத்தைக் கொண்டிருக்க முடியுமா? எது ஒன்று எண்ணத்தையே கடந்து நிற்கிறதோ அது சூன்யத்தைத் தவிர வேறேதாவது இருக்க முடியுமா? மிகப்பெரிய கடவுளின் பண்பாடுகளானவை கேவலம் மனிதனுடைய அறிவுக்கு எட்டாதவை என்று சொல்லப்படுமேயானால், கடவுள் மனிதனுக்குச் சற்றும் பயனில்லை என்பது தானாகவே ஏற்பட்டுவிடுகிறது. கடவுள் எல்லையற்றவர் என்று கூறப்படுமேயானால், அவருக்கும், அவருடைய உயிர்களுக்கும் எத்தொடர்பும் இருக்கமுடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டு தீரவேண்டும். ஆகவே கடவுளை எல்லையற்றவர் என்று சொல்லுவதானது மனிதர்களுக்காக, அவரைக் கொன்றதாக ஆகும். அல்லது குறைந்த அளவு மனிதர்களுக்கு அவரால் எவ்வித பலனுமில்லை என்றாவது ஏற்படும்.

கடவுள் மனிதனை அறிவுடையவனாகப் படைத்தார் என்று சொல்லப்படுகிறது. ஆனால் சகலமும் அறியக்கூடியவனாகப் படைக்கவில்லையே! அதாவது எல்லாவற்றையும் உணரக்கூடியவனாகப் படைக்கவில்லையே. இதிலிருந்து ஏற்படுகிறது என்னவென்றால், கடவுளின் தத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டிய அறிவோடு மனிதனைப்படைப்பதற்குக் கடவுளால் முடியவில்லை, என்பதேயாகும். எனவே மனிதன் கடவுளை அறியும்படியாகச் செய்யும் சக்தியும் அவரிடமில்லை. அறியவேண்டும் என்ற விருப்பமும் இல்லை என்பது உறுதியாகிறது. மனிதனுடைய தத்துவத்தை உணர்ந்துகொள்ள முடியாத இயற்கையோடு அமைந்திருக்கும்போது மனி

தர்களிடத்தில் கோபித்துக் கொள்வதற்கு கடவுளுக்கு என்ன நியாயம் இருக்கிறது? இயற்கையாகவே மனிதன் கடவுள் தத்துவத்தை உணரமுடியாமலிருக்கும்போது அதற்காக நாத்திகர்களைக் கடவுள் தண்டிப்பதாயிருந்தால் அவர் அநீதியானவருகவும், மிகக் கொடுங்கோலனுகவும் இருக்கவேண்டும்.

நாத்திகம் குற்றமல்ல

பெரும்பாலான பாமர மக்களுக்கு பயம் என்பதைவிட முடிவான தர்க்கங்கள் எதுவுமே கிடையாது. இந்தக் காரணத்தால் மதக்காரர்கள் எல்லோரும் நம்மை ஜாக்கிரதையான வழியிலேயே போகவேண்டுமென்று சொல்லுகிறுர்கள். நம்பாமலிருப்பதைவிடக் கொடுமையான காரியம் எதுவுமே இல்லை என்கிறுர்கள். கடவுளிருப்பதைப்பற்றி சந்தேகப்படுகிறவர்களையெல்லாம் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் தண்டிப்பார் என்று சொல்லுகிறுர்கள். அவர் அப்படிக் கொடூரமாய் நடத்துவது நியாயமென்கிறுர்கள். நாத்திகர்களை பழிக்குப்பழிவாங்கும் ஒரு கோபமான அரசனுடைய செய்கையைப் பற்றிக் கேட்பதென்பது பைத்தியக்காரத்தனமேயாகுமென்று சொல்லுகின்றுர்கள். இக்கூற்றுகளை பொறுமையாய் ஆராய்ந்து பார்ப்போமானுல் எது உறுதிபடுத்த வேண்டுமோ அதே கற்பித்துக்கொள்ளப்பட்டிருக்கிறதென்பது தெளிவாகும். 'கடவுளை நம்புவதுதான் நல்லது. சந்தேகத்தாலோ அல்லது மறுத்தாலோ ஆபத்துண்டாகுமென்று நம்மிடம் சொல்வதற்குமுன், முதலாவதாக அவ்விதம் சொல்பவர்கள் நாம் திருப்திபடும்வரையில் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறுர் என்பதை உறுதிபடுத்தவேண்டியது அவசியமாகும். பிறகு மனிதன் தன்னுடைய கூரிய அறிவினுல்கூட அறிந்துகொள்ள முடியாமலிருக்கும் ஒரு பைத்தியமான நிலைமையிலிருப்பதாக அவனைக் கடவுள் தண்டிப்பது நியாயந்தான் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதாவது, சுருங்கக் கூறவேண்டுமானுல் நியாயமே உருவமாக இருப்பதாகச் சொல்லப்படும் ஒரு கடவுள், கடவுள் தத்துவமென்பதை அறியவே முடியாத அவசியத்திலிருக்கும் மனிதனைக் கொடுமையாகத் தண்டிப்பதின் நியாயத்தை உறுதிப்படுத்த வேண்டும். என்னே மதக்காரர்களின் தர்க்கம்! அவர்களே சில கட்டுக்கதைகளை கட்டிவிடுகிறுர்கள். பிறகு முன்னுக்குப் பின் முரணுக காரியங்களை அவைகளோடு பிணைத்துவிடுகிறுர்கள். பிறகு தாங்களே கட்டிய புரட்டுக்களை நம்பாமலிருக்கக்கூடாது என்று பயமுறுத்துகிறுர்கள். இந்த முறைபடி நடப்பதாயிருந்தால் எந்த அபத்தமான ஆபாசத்தையும் நம்பித்தானுக வேண்டும் என்பது ஏற்படும்.

உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளும் நாத்திகர்களேயாவார்கள். ஏனெனில், கடவுளைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆகவே, இதற்காக அவர்களைக் கெட்டவர்களென்றே, பாவிகளென்றே சொல்லமுடியுமா? அவர்கள் எந்த வயதில் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறுர்கள்? பகுத்தறிவு வந்தவுடன் என்று நீங்கள் சொல்லுவீர்கள். இப்பகுத்தறிவுக் காலம் எப்போது ஆரம்பிக்கிறது? அறியமுடியாததென்று சொல்லப்படும் கடவுள் தத்துவத்தை ஆராய்வதில் மிக மேதாவிகளான மதக்காரர்கள்கூட தவித்துக்கொண்டிருக்கும்போது, பெண்கள், தொழிலாளர்கள் முதலிய ஜனத்தொகையின் பெரும்பாலான பாமர மக்கள் என்போர் அதைப்பற்றி என்ன தெரிந்துகொள்ள முடியும்.

கடவுள் நம்பிக்கை தொட்டிற் பழக்கமே

கடவுளைப்பற்றி யாருக்கு ஒன்றுமே தெரியாதோ அவர்களுடைய வார்த்தையைக் கேட்டுத்தான் பிறரும் கடவுளை நம்புவதற்கு ஆரம்பிக்கிறுர்கள். நமது வளர்ப்புத் தாய்கள்தான் நமது கடவுள் உபாத்தியாயர்கள். மனிதர்கள் ஓநாய் பிசாசு முதலியவைகளைப் பற்றிக் குழந்தைகளிடம் சொல்லுகிறுர்கள். பச்சிளம் பிராயத்திலிருந்தே இயந்திரம் மாதிரி இரண்டு கைகளையும் தாங்களாகவே சேர்க்கும்படி சொல்லிக் கொடுக்கிறுர்கள். அப்படிச் சொல்லிக் கொடுக்கும் வளர்ப்புத் தாய்களுக்கே கடவுளைப்பற்றி அக்குழந்தைகளுக்குத் தெரிந்ததைவிட சிறிதாவது விபரமாய்த் தெரியுமா?

கடவுள் என்பது ஒரு பரம்பரை வழக்கம்

ஒரு குடும்பத்தின் சொத்தும், அதன் பொறுப்பும் எப்படி ஒரு தகப்பனுல் தன்னுடைய சந்ததியார்களுக்குக் கொடுக்கப்படுகிறதோ அதைப் போலவேதான் மதம் என்பது கொடுக்கப்படுகிறது. கடவுள் என்பதை ஒருவர் மற்றெருவருக்கு சொல்லிக்கொடுக்காமலிருந்தால் உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்குக் கடவுள் என்றுல் என்ன என்பதே தெரியாது. ஒவ்வொருவனும் தனது முன்னேர்களிடமிருந்து எந்தக் கடவுள் என்பதை

பற்றித் தெரிந்துகொண்டானே அதையே தான் தனது சந்ததியார்களுக்கும் சொல்லுகிறான். ஆனால் அவனுடைய விருப்பத்திற்குத் தக்கபடி ஒவ்வொருவனும் அந்தக் கடவுளைத் திருத்தியும், புதுப்பித்தும், அழகுபடுத்தியும் சொல்லுகிறான்.

அதன் ஆரம்பக் காலம்

மனிதனுடைய மூளையானது முக்கியமாக இளம் பிராயத்தில், ஒரு மிருதுவான மெழுகைப்போல் எந்த வழியிலும் திருப்பக்கூடியதாக இருக்கிறது. தானே யோசிக்கும் தன்மை வரக்கூடாத பருவத்தில் மனிதனுடைய எண்ணங்களையெல்லாம் உண்டு பண்ணுவது அவனுடைய கல்வியே யாகும். இதையுணராமல் சிறிய வயதில் சரியாகவோ, தவறாகவோ நமது மண்டைக்குள் புகுத்தப்பட்ட எண்ணங்களெல்லாம் நமது பிறப்பிலேயே இயற்கையாக ஏற்படும் உணர்ச்சியென்று தவறாக நம்பிக்கொண்டிருக்கிறோம். இந்த மனப்பான்மைதான் நமது பிரபுக்களுக்கெல்லாம் அடிப்படையாக இருக்கிறது.

அது பரவும் விதம்

யார் நமக்கு போதிக்கிறார்களோ அவர்களுடைய எண்ணங்கள் நமக்குள் புகுத்தப்படுகின்றன. நம்மைவிட அவர்களை அதிக புத்திசாலிகள் என்றே நாம் நம்புகிறோம். நமக்குக் கற்பிக்கப்படுபவைகளை அவர்கள் பூரணமாய் அறிந்து கொண்டுவிட்டதாகவே நாம் நினைத்துக் கொள்ளுகிறோம். நமக்கு நாமே உதவி செய்துகொள்ள முடியாத பக்குவத்தில் அவர்கள் நம்மைப்பற்றிக் கவலையெடுத்து வந்ததனால் பிறகு ஏமாற்றமாட்டார்கள் என்றே தீர்மானிக்கிறோம். இந்த எண்ணத்தினால்தான் ஆதரவில்லாத ஆயிரக்கணக்கான தவறுகளைக் கண்மூடித்தனமாய்க் கையாள ஆரம்பிக்கின்றோம். அவர்கள் சொல்வதைப்பற்றி ஆராயக்கூடாதென்று அவர்கள் சொல்லியிருந்துங்கூட அவர்கள்மீது நமக்கு நம்பிக்கை குறைவதில்லை. ஆனால் அதற்கு மாறாக அவர்களுடைய எண்ணங்களுக்கு மரியாதை செய்கிறோம்.

பகுத்தறிய முடியாத காலத்தில் கற்பிக்கப்பட்டவை

மனித சமூகமானது சரி எது, தவறு எது என்றும், வலதுகை எது, இடதுகை எது என்றும் தெரிந்துகொள்ள முடியாத ஒரு பிராயத்திலேயே மதக்கொள்கைகளைப் பற்றிச் சொல்லிக்கொடுப்பதில் போதனைக்காரர்கள் மிக உண்ணிப்பாக இருக்கிறார்கள். நாற்பது வயதான ஒரு மனிதனுடைய குறைதிசயங்களைத் திருத்துவதென்பது எவ்வளவு கடினமான காரியமோ, அவ்வளவு கடினந்தான் நாற்பது வயதான மனிதன் தனது சிறு பிராயத்திலிருந்தே கடவுளைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கும் எண்ணங்களை மாற்றுவதிலும் இருக்கிறது.

இயற்கைக்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை

கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதற்கும், அந்த உண்மையை நிரூபிப்பதற்கும் இயற்கை விநோதங்களே அத்தாட்சியாகும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், இயற்கையைப்பற்றி நினைக்கவும் அதனுடைய வளர்ச்சியைப்பற்றி ஆலோசிக்கவும் இவ்வுலகில் எத்தனை பேருக்கு அவகாசமும், சாமர்த்தியமும், போதிய பிரியமும் இருக்கிறது என்று கேட்கிறேன்? உலகத்திலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இவ்வியற்கையைப்பற்றி கவலையே கிடையாது. ஒரு குடியானவன் தான் தினந்தோறும் பார்த்துக்கொண்டிருக்கும் சூரியனின் அழகைப் பார்த்து மனங்களிப்பதில்லை. ஒரு கப்பலோட்டியானவன் சமுத்திர அலைகளின் அசைவுகளைப் பார்த்து ஆச்சரியப்படுவதில்லை. அவனுக்கு அதிலிருந்து மத சம்பந்தமான தத்துவார்த்தங்கள் தோன்றுவதுமில்லை. இயற்கையின் அதிசயங்களுக்குக் காரணம் கூறமுடியாத ஏதோ சிலருக்கு மாத்திரம் கடவுளின் சக்தி இயற்கை வழியாக அறியக்கூடியதாகத் தோன்றலாமே ஒழிய, இயற்கையின் அதிசயத்தைக்கொண்டு கடவுளிருப்பதாக நிரூபித்துவிடமுடியாது. நிதானமான மனப்பான்மையை உடைய ஒரு தத்துவ ஞானிக்கும் இயற்கையின் அதிசயங்கள் ஒரு நிரந்தரமான சட்டங்களுக்குட்பட்டது என்று தோன்றுமேயொழிய, வேறு எவ்விதத் தத்துவமும் தோன்றாது. இயற்கை என்பது பல வேறான பொருள்கள் பலவிதங்களில் ஒன்று சேர்வதின் பயனேயாகும் என்ற உண்மை அவனுக்குப் புலப்படும்.

இயற்கை அதிசயங்களுக்குக் காரணம் உண்டு

இயற்கை அதிசயங்களிலிருந்து மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியவை பலப்பலவும், அவைகளைத் தனது சுகவாழ்விற்கு பயன் படுத்திக்கொள்ள வேண்டிய அவசியங்களும்

இருக்க, அவைகளுக்குக் காரணமான ஒன்று, அறிய முடியாத ஒன்று, கற்பனையான ஒன்று இருப்பதாக நினைத்துக்கொள்வது எவ்வளவு பொருத்தமற்ற வாதம் என்பதைப் பாருங்கள். நம்மால் அறியக்கூடிய ஒன்றுக்கு நம்மால் அறியவே முடியாத ஒன்று கர்த்தா என்று சொல்வதானது எவ்வளவு அபத்தமானது என்பதை யோசித்துப் பாருங்கள், கடவுள் என்றால் என்ன? ஆவி அல்லது ஆத்மா என்றால் என்ன? நம்மால் ஒன்றுமே புரிந்து கொள்ளமுடியாத நிலைமையைச் சொல்லக் கூடிய வார்த்தைகளாகும். ரிஷிகளும், குருமார்களும் இயற்கையையும், அதன் காரண காரியங்களையும் பற்றி சிந்தனை செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அதன் உண்மையை உணர்வார்கள். அவ்வாறு உணர்ந்து கொண்டால் இயற்கைக்கு மாறான கட்டுக் கதைகளைப் போன்ற எண்ணங்களைத் தேடி அலையமாட்டார்கள். ஏனெனில் அவ்வாறு அலைவதால் அவர்களுடைய அறிவு விசாலப்படுவதற்கு மாறாக அவர்களை அவர்களே அறிந்துகொள்ள முடியாமல் அவர்களுடைய மூளைகளைச் சிக்கலில் கொண்டுபோய் புகுத்தி இடர்ப்பட்டுவிடுகிறார்கள்.

கடவுள் என்ற ஒன்று இல்லாமல் இயற்கைக்குக் காரணம் கூறமுடியாது என்கிறார்கள். அதாவது அவர்களுக்கு எதைப்பற்றி மிகச் சொற்பமாகத் தெரியுமோ அந்த ஒன்றை (கடவுளை)க் காரணமாகக் காட்டுகிறார்கள். எது ஒன்று விளங்காததாக இருக்கிறதோ அதை இன்னும் விளங்காத ஒன்றைக் கொண்டு விளக்கிவிடுவதாகப் பொய் நடிப்பு செய்கிறார்கள். ஒரு முடிச்சின்மேல் இன்னும் பல முடிச்சுகள் போட்டு அவிழ்த்து விட்டதாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். மிகத் தீவிரமான தத்துவ ஞானிகளே! கடவுளிருப்பதாக நிரூபிக்க வேண்டுமானால் தாவர நூலிலுள்ள விஷயங்களைக் காப்பியடியுங்கள். மனித உடம்பிலுள்ள ஒவ்வொரு அணுவைப்பற்றியும் சோதனை செய்து அறிந்துகொள்ளுங்கள். ஆகாயத்தில் பறந்துபோய் நட்சத்திரங்களின் சுழல்களைக் கணக்கெடுங்கள், பிறகு கீழே பூமிக்கு வந்து தண்ணீர் ஓடும் முறைகளைக் கவனித்து அறியுங்கள். அதன் பிறகு வண்ணாத்திப் பூச்சிகள், புழுக்கள், நீர் ஜந்துக்கள், அணுக்கள் முதலிய எல்லாவற்றிலும் உங்களுடைய கடவுளரின் பெருமை தெரிவதைப் பற்றி தெளிவுரை எடுத்துக் காட்டலாம். இவைகளெல்லாம் உங்கள் கடவுள் இருப்பதை உறுதிபடுத்திவிட முடியாது. ஆனால் இவை எதை உறுதிபடுத்துமென்றால் இயற்கையிலுள்ள அணுக்கள் பல விதங்களாகச் சேரும்முறை, அதன் காரண காரியங்கள் முதலியவைகளைப்பற்றி உங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்பதைதான் உறுதிபடுத்தும். இன்னும் இயற்கையை நீ அலட்சியப்படுத்தி விட்டாய் என்பது விளங்கும். தொலைநோக்கும் கண்ணாடிக்குக்கூடப் புலப்படாத பல அணுக்களும் ஜந்துக்களும் இருக்கின்றன என்ற ஒரு செய்தியே உனக்குத் தெரியாது என்பது தானாய் விளங்கும். கடைசியாகத், தொட்டுப் பார்க்கக் கூடியதும், உணரக் கூடியதுமான பலவற்றை உனது அறிவானது உணர்ந்துகொள்ள முடியாமலிருக்க, தெரியாத ஒரு உலகத்தில் உன் அறிவுக்கு எக்காலும் புலனாகாத ஒன்று தலைவனாக இருப்பதாக நீ சொல்லிக் கொள்வதானது உனக்குச் சுலபமாக இருக்கிறது என்கிற குட்டு இதனால் வெளிப்படுகிறது.

உலகம் ஒருவராலும் படைக்கப் படவில்லை

காரணமில்லாமல், காரிய முண்டாகாது, என்று மதக்காரர்கள் எல்லோரும் வெகு சிரத்தையோடு கூறுகிறார்கள். உலகம் தானாகவே உண்டாகவில்லை என்று அடிக்கடி சொல்லுகிறார்கள். ஆனால் நான் சொல்வதென்னவெனில் உலகம் என்பது காரணமே ஒழிய காரியமல்ல. இது ஒருவராலும் செய்யப் படவில்லை. ஏனெனில் இதைச் செய்ய எவராலும் முடியாது. உலகம் எப்போதுமே இருந்து கொண்டுதானிருக்கிறது, அது இருக்கவேண்டிய அவசியமும் இருக்கிறது. அதற்குக் காரணம் அதுவேதான். இயற்கையானது நம் கண்ணெதிரில் எப்பொழுதும் அசைந்து கொண்டும் உற்பத்தியாகிக்கொண்டும் இருப்பதுமே அதன் தத்துவமாகும். ஆகையால் அதை நடத்துவதற்குக் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தி வேண்டிய அவசியமேயில்லை. உயிரற்ற பொருள்களானது தன்னுடைய சக்தியைக்கொண்டும் வேறுபாட்டின் காரணத்தினாலும் அசைகிறது, அதனுடைய பலவிதமான அசைவுகளுக்குக் காரணம். அதனிடமிருக்கும் பலவிதமான சத்துக்களேயாகும். ஒவ்வொரு ஜீவனைப்பற்றியும் நமக்கிருக்கும் வேறுபட்ட உணர்ச்சியாலும் அதனதனுடைய வேறுபாடான அசைவுகளாலுமே, நாம் ஒரு உயிருக்கும், மற்றொன்றுக்கும் இருக்கும் வேறுபாட்டை உணர்கிறோம்.

[இந்தக் கட்டுரையை எழுதியவர் ஜீன் மெஸ்லியார் என்பவர். அவர் கத்தோலிக்கப் பாதிரியாராக இருந்து பிறகு நாத்திகரானவர்.]

கூறுவாயோ? அல்லது மறப்பாயோ?

[இரா. நெடுஞ்செழியன்]

தலைவன் பகலிலும், இரவிலும் தலைவியைத் தனியே காணுவதற்கான வழிவகை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு, கழிபேருவகையோடு களவொழுக்கத்தைக் கடைபிடித்து வருகிறான்.

தலைவி, தன்பால் தலைவன் கொண்டுள்ள அன்பையும், தனக்கு அவன் காட்டிவரும் ஆதரவையும் எண்ணி எண்ணி இறும்பூதெய்துகிறாள். களவொழுக்க இன்பமே அவளுக்குக் கழிபேரின்பமாக இருந்துவருகிறது.

அவ்விளங் காதலர்கள் இளமரச்சோலையிலும், நெடுஞ்சாலைப்பக்கமும், குன்றின் சரிவிலும், குளக்கரை ஓரத்திலும், ஆற்றுமணற் பரப்பிலும், அடர்ந்த காட்டிடத்தும் மாறிமாறி ஒருவரையொருவர் காணுவதும், ஓடியாடி மகிழ்வதும், பேசியிருப்பதும், கூடிமகிழ்வதும் ஆன களவொழுக்கப் பயன்களை நுகர்ந்துவருகின்றனர்.

அக்கட்டிளங்காளையும், அப் பொற்கொடி மகளும் காதல்துறையில் ஈடுபட்டிருப்பதை ஊராரில் சிலர் அறிந்துவிடுகின்றனர். அதுவும் ஓயாமல் ஊர்வம்பு பேசுவதிலும், பிறரைப் பற்றி அலர் தூற்றுவதிலும் வல்ல முதுமைப் பெண்டிர், அக் காதலன் காதலியரின் களவொழுக்கத்தைப்பற்றிக் குசுகுசுவென்று பேசத் தொடங்குகின்றனர்.

தனது களவொழுக்கம் ஊர்மக்களில் சிலர்க்குத் தெரிந்துவிட்டது என்றுஅறிந்தவுடன், தலைவன் பகற்குறி- இரவுக்குறி இடங்களுக்குப் போய்வர அச்சங்கொள்கிறான். தனது போக்குவரத்தை யாரேனும் கண்டுவிடுவார்களோ, தலைவியின் தாய் தந்தை தமையன்மார்களால் தனக்கு ஏதேனும் துன்பம் நேரிடுமோ என்று தலைவன் அஞ்சி அஞ்சிக் குறியிடங்களுக்குப் போகாமல் நின்றுகொள்கிறான்.

தலைவன் வருகைதராமல் நின்றுவிட்டது தலைவிக்குப் பெருத்த மனவருத்தத்தையும், கலக்கத்தையும் தருகிறது. காதலன், தன்னைக் கைவிட்டுவிட்டானோ, அல்லது மறந்துபோய் விட்டானோ, அல்லது யாரேனும் அவனைத் தடுத்து நிறுத்திவிட்டார்களோ, அல்லது அவனுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதோ, அல்லது அவனுக்கு ஏதேனும் இடர்பாடு நிகழ்ந்ததோ அல்லது அவனது தாய்தந்தையர்கள் அவனைச் சினந்துகொண்டார்களோ, அல்லது வேறுயாரையேனும் மணமுடிக்க எண்ணிவிட்டானோ என்று பலவாறு எண்ணி எண்ணித் தலைவி வருந்துகிறாள். அவள் வருத்தமேலீட்டால் ஆடை குலைந்து, அணிகலன்கள் நெகிழ்ந்து, அழகு குறைந்து, கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சியளிக்கிறாள். அவளுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. தன்னுடைய நிலையைத் தலைவனிடம் யார்போய்ச் சொல்லுவார்கள் என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறாள்.

ஒருநாள் மாலைப்பொழுது. தலைவி வருத்தத்துடன் மேல்மாடியின் நிலாமுற்றத்தில் உலாவிக் கொண்டிருக்கிறாள். தலைவனைப் பற்றிய நினைவு அலைகள் அவள் உள்ளத்தில் அலைமோதுகின்றன. உலகமே இருண்டது போல் அவளுக்குக் காணப்படுகிறது. என்ன செய்கிறோம், ஏது செய்கிறோம் என்பதே அவளுக்குப் புரியவில்லை.

அப்பொழுது, வெள்ளிய நிறங்கொண்ட நாரை ஒன்று, தலைவியின் எதிரே மாடியின் கைப்பிடிச்சுவரில் வந்து உட்காருகிறது. கலங்கிய உள்ளத்தோடு தன்னந்தனியாக உலாவிக்கொண்டிருக்கும் தலைவி, தனக்கு ஓர் நண்பன் வந்திருப்பதாக எண்ணி அதன் அருகே நெருங்குகிறாள். மிக அண்மையில் நெருங்கிவிட்டால், அது பறந்துபோய்விடுமோ என்று எண்ணி சற்றுதொலைவாகவே நின்றுகொள்கி

றாள். நாரையை அவள் உற்றுப்பார்க்கிறாள்; நாரையும் அவளை நன்றாக உற்றுப்பார்க்கிறது.

"சிறிய வெள்ளை நாரையே! சிறிய வெள்ளை நாரையே" என்று தலைவி அதனை விளிக்கிறாள். நாரை தன் அலகினைக் கால்களில் தேய்த்துக்கொண்டும் அப்புறம் இப்புறம் தலையை அசைத்துக்கொண்டும் இருக்கிறது.

"என்னோடு பேச உனக்கு விருப்பமில்லையா?" என்று அதனைப் பார்த்துக் கேட்கிறாள். அது அவளை உற்றுப் பார்த்தவண்ணமிருக்கிறது.

"என்னோடு பேச உனக்கு விருப்பமில்லாவிட்டாலும், நான் பேசுவதையாவது நீ கேள்!" என்கிறாள். அது கல்லில் தன் அலகைத் தீட்டிக்கொண்டு மேலும் கீழும் தலையை அசைத்துக்கொண்டிருக்கிறது. தலைவி அதனிடம் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறாள்.

"சிறிய வெளிய நாரையே! சிறிய வெளிய நாரையே! நீர்த்துறையில் வெளுத்த வெள்ளாடையைப்போன்று, உன் சிறகு எவ்வளவு வெண்மையாக இருக்கிறது தெரியுமா? நாரையே? நீ என் காதலர்பால் போய் என்னுடைய துன்பத்தை இதுவரை சொல்லியதில்லை! இனிமேலாகிலும் சொல்லமாட்டாயா? நீயே பார் என்னை! நான் எப்படி வருத்தத்தால் மெலிந்துகிடக்கிறேன், என் அணிகலன்கள் எப்படிக் கழன்றுகிடக்கின்றன என்பதை நீயே பார்! என்னுடைய இந்த நிலையை அவரிடம் போய்ச் சொல்லமாட்டாயா? அவருடைய ஊர் நீண்டதொலைவில் இருக்குமோ என்று நீ அஞ்சாதே! இங்குள்ள கழனிகளிடத்துப் பாயும் சிறுவாய்க்கால், அவரது ஊரிலிருந்துதான் வருகிறது! அது மிக அண்மையில்தானிருக்கிறது! நீ பெரிதும் களைப்பாக இருந்தால், எனது ஊர்க்குளத்திலேயுள்ள சினையுள்ள கெளிற்றுமீனை நன்றாகத் தின்றுவிட்டுப் பிறகு அவருடைய ஊருக்குச் செல்வாயாக! நீ இங்கு வந்து மீனை உண்ட நன்றி மறவாமல், இனியேனும் அவரிடம்போய் என் நிலையை எடுத்துக் கூறுவாயா? அந்த அளவுக்கு நீ என்னிடம் அன்பைக் காட்டுவாயா! அல்லது மறந்துவிடுவாயா! நாரையே! நீ எதனைச் செய்துகாட்டப் போகிறாய்? என்னிடம் சொல் பார்ப்போம்!"

இப்படித் தலைவி சொல்லிக்கொண்டிருக்கும்போதே, நாரை சிறகடித்துப் பறந்து செல்வதாகிறது. தலைவி, அது பறந்து செல்வதை ஏக்கத்தோடு பார்துக்கொண்டு நிற்கிறாள்!

இது **நற்றிணை 70**-ஆம் செய்யுளின் உட்கருத்தின் விளக்கமாகும். இந்தச் செய்யுள் மருதத்திணையின் பாற்பட்டுக், காதல் மிகுதியால் தானே மொழிதல் என்னும் துறையைப் பற்றி விளக்குவதாகும். இதனை இயற்றியவர் **வெள்ளிவீதியார்** என்னும் சங்ககாலப் பெரும் பெண்பாற்புலவராவார். இவர் மதுரையில் வெள்ளியம்பலத் தெருவில் வாழ்ந்துவந்ததால், இவருக்கு வெள்ளிவீதியார் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். இவரது இயற்பெயர் இன்னது என்று தெரியவில்லை. இவர் கணவரைவிட்டுப் பிரிந்து தனித்து வாழ்ந்தவர் என்று தெரியவருகிறது. அதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. இவர் கணவனைவிட்டுப் பிரிந்து வருந்தி, அவனிடம் சென்றாகிலும் அவனைக் காண்போம் என்று புறப்பட்டுப் போயினார் என்று தெரியவருகிறது. இவருடைய பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றில் காணப்படுகின்றன.

சிறுவெள்ளாங் குருகே! சிறுவெள்ளாங் குருகே!
துறைபோகு அறுவைத் தூமடி அன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே!
எம்மூர் வந்தெம் ஒண்துறைத் துழைஇச்
சினைக்கெளிற் றார்கையை அவரூர்ப் பெயர்தி
அனையஅன் பினையோ பெருமற வியையோ
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே!

[நற்றிணை—70]

[பொழிப்புரை : சிறிய வெள்ளிய நாரையே ! சிறிய வெள்ளிய நாரையே ! நீர்த்துறையிலே அலசிய வெள்ளாடையின் மாசற்ற மடிபோன்ற நன்னிறம் விளங்கிய சிறகினையுடைய சிறிய வெள்ளியநாரையே ! அவ்விடத்திலுள்ள இனிய புனல் இவ்வூரின் கண்ணே வந்து பரக்கின்ற கழனியை யுடைய நல்ல வூரினையுடைய எனது காதலர்பால் ஏகி, என்னுடைய அணிகலன்கள் கழலுகின்ற துன்பத்தை இதுகாறும் சொல்லாத நாரையே ! நீ எம்மூரினை யடைந்து எமது ஒள்ளிய குளத்தினது துறையிலே புகுந்து துழாவிச் சினையுள்ள கெளிற்று மீனைத் தின்றனையாகி, அப்பால் அவருடைய ஊருக்குச் செல்வாயாக! எம்மூர் வந்துண்ட நன்றி மறவாமல், இனி அவரிடம் கூறுதற்குத்தக்க அனைய அன்பினையுடையையோ ? இல்லையேல் பெரிய மறதியை யுடையையோ ? ஏதாவது ஒன்றினை ஆராய்ந்து கூறுவாயாக !

குருகு - நாரை ; துறை - நீர்த்துறை ; அறுவை - ஆடை ; தூவி - சிறகு ; ஒள் - ஒளிபொருந்திய ; துழைஇ - துழாவி ; இழை - அணிகலன் ; மறவி - மறதி ; பருவரல் ; துன்பம்.]

காதலனைப் பிரிந்து வருந்தும் காதலி தன் உள்ளக் குமுறலை நாரையிடத்தில் சொல்லி ஆறுதல் பெறுவதும், நாரையைக் காதலனிடத்தில் தூதுபோகச்சொல்லி ஆறுதல் பெறுவதும், பண்டைக்காலத் தமிழ்ப்புலவர்கள் செய்யுள் மரபில் கற்பித்துக்கொண்ட கற்பனைகளாகும். காதலியின் உளப்பாங்கைப் படம்பிடித்துக்காட்ட இத்தகைய கற்பனைகள் புலவர்க்குப் பெரிதும் பயன்பட்டுவருகின்றன.

தலைவிக்கு அணிகலன்கள் கழலுவது என்பது அவளது ஆழ்ந்த வருத்தத்தையும், துன்பத்தையும் காட்டும் அறிகுறியாகும். வருத்தமும், துன்பமும் அவளது உடலை மெலிவிக்கின்றன. உடலுறுப்புகள் மெலியவே, அவ் உறுப்புகளில் அணிந்துள்ள அணிகலன்களும் கழலுவனவாகின்றன.

நாரை வெள்ளிய நிறமுடையதாக இருக்கும் என்பதும், அது குளத்திலுள்ள கெளிற்று மீனை விரும்பி உண்ணும் என்பதும் குறிப்பிடப்படுகின்றன.

நாரையின் வெண்மை நிறத்திற்கு, நீர் துறையிலே அலசி மாசுபோக்கிய வெள்ளிய ஆடையை உவமையாகக் கூறியிருப்பது மிகுதக்க நயப்பாடாகும்.

அங்குள்ள தீம்புனலே இங்கும் வருகின்றது என்று கூறுமுகத்தான், அங்கும் தின்னுவதற்கு மீன் கிடைக்கும், அவ்வூருக்குப் போ என்று நாரைக்கு அவள் அறிவுறுத்தியதாகிறது.

உலகிலே உயரமானவர்

உலகில் வாழ்ந்தவர்களில், உயரமானவர்களைப்பற்றி சிலசில குறிப்புக்களே கிடைக்கப்பெறுகின்றன. காபரா *என்ற அராபியன் 9 அடி 9 அங்குலம் உயரம் இருந்ததாகப்* பிளினி *குறிப்பிடுகிறார்.* மாக்சிமின் (கி.பி.235) *என்னும் பேரரசர் 8 அடி 6 அங்குலம் உயரம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 1578 ஆம் ஆண்டில் பிறந்த, லங்காஷயரைச் சேர்ந்த* சான் மிடில்டன் *9 அடி 3 அங்குலம் உயரம் வளர்ந்திருந்தானும். 1761 இல் பிறந்த* பாட்டிரிக் காட்டர் *எனும் அயர்லாந்துக்காரன் 8 அடி 7 அங்குலம் உயரம் இருந்தானும். 1865 இல் இலண்டனில் நடைபெற்ற கண்காட்சிக்கு வந்திருந்த* சாங் - ஊ - கௌ *என்னும் 19 வயதுடைய சீனன் 7 அடி 8 அங்குலம் உயரம் வளர்ந்திருந்தானும்.*

1905 இல் இருபத்திமூன்று வயதுடைய மாச்நௌ *எனும் இரஷ்யாக்காரன் 9 அடி 8 அங்குலம் உயரம் காணப்பட்டானும். 1866 இல், அமேசான் நதிதீரத்தில் பிறந்த* மாரியன் *என்னும் பெண் 8 அடி 2 அங்குலம் வளர்ந்திருந்தாளாம்.*

இதுவரையில் உலகில் வாழ்ந்தவர்களில் யார் உயரமானவர் என்பது, பதிவு செய்துவைக்கப்படாத ஒருவராக இருக்கவேண்டும் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

வினாவும் விளக்கமும்

வினா: தங்கள் கொடியைக் கிழித்து எறிந்தால் கோபம் வருமா வராதா? கோபம் வரும் என்றால் அது ஒரு சிறு துணிதானே? அதன் மதிப்பு எட்டணா அல்லது ஒரு ரூபாய்தானே? அது ஒரு இலட்சியக் கொள்கையின் அடையாளம் என்றால் அப்படித்தானே திருவுருவங்களும்?

[இது அருள்நெறித் திருக்கூட்டத்தின் 14 வது வினா.]

விளக்கம்: கழகத்தின் கொடியை மாற்றான் ஒருவன் கிழித்தெறிகிறான் என்றால், அப்பொழுது பெரும்பாலான கழகத்தோழர்களுக்குக் கோபம் வரவேசெய்யும். 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்னும் சான்றாண்மையோடு, மாற்றானின் அறியாமைக்காக இரங்கி, அவனது செயலை எள்ளிநகையாடி, அவனை மன்னித்துவிடும் பண்பும் கழகத்தவரில் ஒரு சிலரிடத்தில் இருக்கவே செய்கின்றது.

மாற்றான் கழகக்கொடியைக் கிழித்தெறிவது கண்டு கழகத் தோழர்களுக்குக் கோபம் வருகிறது என்றால், எல்லாம்வல்ல அறிவும் ஆற்றலும் பண்பும் நிறைந்த கொடியை மாற்றான் கிழித்தெறிகிறானே என்ற காரணத்துக்காக அல்ல, தமது உடைமையைப் பாழ்படுத்துகிறானே, தமது நோக்கத்தைக் கேலி செய்கிறானே, தமது குறிக்கோள்களுக்கு இழிவு கற்பிக்கிறானே என்ற காரணங்களுக்காகத்தான் கோபம் வருகிறது. ஏனென்றால் கொடிக்குக் கழகத்தவர் சிலபல குறிக்கோள்களைக் கற்பித்திருக்கிறார்கள். கழகத்தவர் தம் கொடிக்குக் குறிக்கோள்களைக் கற்பித்திருக்கிறார்களே ஒழிய, கொடியாகப் பார்த்து எந்தக் குறிக்கோளையும் தனக்காகவென்று எடுத்துக்கொள்ளவில்லை; அதற்கு அறிவோ ஆற்றலோ பண்போ கிடையா. நாம் எந்தக் கொடிக்கு எந்தக்குறிக்கோளைக் கற்பித்தாலும் சரி கற்பிக்காவிட்டாலும்சரி, அதற்கான குறிக்கோளை அப்படியே வைத்திருந்தாலும்சரி அதனை அடிக்கடி மாற்றினாலும்சரி, அதனை மதித்தாலும்சரி மதிக்காவிட்டாலும்சரி கொடி துணி என்ற நிலையில் அப்படியேதான் இருக்கும்; ஏன் எனக்குக் குறிக்கோளைக் கற்பிக்கவில்லை? ஏன் எனது குறிக்கோளை மாற்றுகிறீர்கள்? ஏன் என்னை மதிக்க, வழிபட, வாழ்த்த மறுக்கிறீர்கள்? என்று அது ஒரு நாளும் கேட்கப்போவதில்லை; அது அறிவும் ஆற்றலும் அற்ற உயிரற்ற பொருளாகவேதான் இருக்கும். கொடியை மாற்றான் இழிவுபடுத்துகிறான் என்றால், கழகத்தவர் தம்மைத், தம்முடைய நோக்கத்தைத் தம்குறிக்கோளைத், தம் கழகத்தை இழிவு படுத்துவதாகத்தான் கருதுகிறார்கள். காரணம் அது இலட்சியக் கொள்கையின் அடையாளம் என்று கருதுகிறார்கள். இதில் ஐயப்பாடு ஏதுமில்லை.

கொடித்துணி எட்டு அணாவோ அல்லது ஒரு ரூபாயோதான் பெறும் என்றாலும், அந்த அளவுக்கு விலைமதிப்புள்ள உடைமையை மாற்றான் பாழ்படுத்துகிறானே என்று எண்ணி, கழகத்தோழர்கள் கோபம் கொண்டாலும் அதில் வியப்பொன்றுமில்லை; தவறொன்றுமில்லை.

கொடி எப்படி இலட்சியக் கொள்கையின் அடையாளமாகக் கொள்ளப்படுகிறதோ, அப்படித்தான் கடவுள் திருவுருவங்களும் கொள்ளப்படுகின்றன என்று அருள் நெறித் திருக்கூட்டத்தார் வாதிட்டு நிற்கின்றனர்.

கொடியைப் பாழ்படுத்தும்போதும் இழிவுபடுத்தும்போதும் கழகத் தோழர்களுக்குக் கோபம் வருவதைப்போலவே கடவுளுருவங்களைப் பாழ்படுத்தும் போதும், இழிவுபடுத்தும்போதும் பக்தர்களுக்குக் கோபம் வரும் என்று திருக்கூட்டத்தார் கூறுகிறார்கள் என்றால், அது தவறு என்று நாம் கூறவில்லை, அது இயல்பு என்றுதான் கூறுகிறோம். தம் கொடியைக் கழகத்தவர் தம் உடைமையாகக் கருதுவதைப்போலத், திருக்கூட்டத்தார் தம் கடவுளுருவங்களைத் தம் உடைமைகளாகக் கருதுகிறார்கள் என்றால் அதிலும் நாம் தவறு காண முற்பட்டோமில்லை.

கொடிக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் இலட்சியக் கொள்கைகளைத் தாக்கவும், எதிர்க்கவும்,

கேலிசெய்யவும், கிண்டல்புரியவும், இழித்துரைக்கவும், பழித்துச்சொல்லவும் பக்தர்களுக்கு எவ்வளவு உரிமையிருக்கிறதோ, அவ்வளவு உரிமை கடவுளுருவங்களுக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் இலட்சியக் கொள்கைகளைத் தாக்கவும், எதிர்க்கவும், கேலிசெய்யவும், கிண்டல்புரியவும், இழித்துரைக்கவும், பழித்துச்சொல்லவும் பகுத்தறிவாளர்க்கும் உண்டு என்பதைத் திருக்கூட்டத்தார் உணரவேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் கடவுளுருவங்களையெல்லாம் பொருட்காட்சிப் பொருள்களாக மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறோமே ஒழிய, அவைகளை உடைத்தெறியவோ பாழ்படுத்தவோ விரும்புவதில்லை. பக்தர்களில் சிலர் அங்காங்கு கழகக்கொடியை வலுக்கட்டாயமாக எரித்தும், கிழித்தும், பாழ்படுத்தியும் வருகிறார்கள். ஆனால் தி. மு. கழகத் தோழர்கள் கடவுளுருவங்களை வலுக்கட்டாயமாக உடைக்கும் பழக்கத்தை எங்கும் கொள்வதில்லை.

உள்ளபடியே தி. மு. கழகக் கொடியைக் கண்டால் பக்தர்களுக்கு இழிமுறையில் கோபம் பொங்கி எழுகிறது. ஆனால் கடவுளுருவங்களைக் கண்டால் கழகத்தோழர்களுக்குக் கேலிச் சிரிப்பு ஏற்படுமேயல்லாமல், அவர்கள் பக்தர்களைப்போல், இழிமுறையில், கோபத்திற்கு உள்ளாவதில்லை.

கழகக் கொடிக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் இலட்சியக் கொள்கைகளை மதிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ திருக்கூட்டத்தார் எப்படி ஒருப்படுவதில்லையோ, அப்படித்தான் கடவுளுருவங்களுக்குக்கற்பிக்கப்பட்டிருக்கும் இலட்சியக் கொள்கைகளை மதிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ தி. மு. கழகத்தவர் ஒருப்படுவதில்லை. இதனை ஏனோ திருக்கூட்டத்தார் தெரிந்துகொள்ள மறுக்கின்றனர்.

கொடியைப் போலத்தான், கடவுளுருவமும் ஒரு இலட்சியக் கொள்கையின் அடையாளம் என்று வினவில் குறிப்பிடும் திருக்கூட்டத்தார், அப்படியே உள்ளபடியே கொள்ளுகிறார்களா? கொடிக்கு ஜம்புலனறிவோ, ஆற்றலோ, பண்போ கிடையா, அது வெறும் துணி என்று நாம் அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறோம். அப்படியே கடவுளுருவத்திற்கும் ஐம்புலனறிவோ, ஆற்றலோ, பண்போ கிடையா, அது வெறும் கல்-மண்-மரம்-செம்பு-இரும்பு-வெண்கலம்-வெள்ளி-தங்கம்தான் என்று கூறிடத் திருக்கூட்டத்தார் முன்வருவார்களா? கொடி கழகத் தோழர்களிடத்தில் வாழ்த்துதலையோ, வழிபாட்டையோ, வடையையோ, சர்க்கரைப்பொங்கலையோ, தேரையோ, திருவிழாவையோ, பெண்டாட்டியையோ, வைப்பாட்டியையோ, கோயிலையோ, குளத்தையோ தம்மிடம் எதிர்பார்ப்பதில்லை என்றுதான் கழகத் தோழர்கள் கூறுகிறார்கள். அது போலவே கடவுளுருவமும் மேற்கூறப்பட்டவைகளைத் தம்மிடம் எதிர்பார்ப்பதில்லை என்று கூறிடத் திருக்கூட்டத்தார் முற்படுவார்களா?

கடவுளுருவத்திற்கு ஐம்புலனறிவும், பகுத்தறியும் ஆறாவது அறிவும், எல்லாம்வல்ல ஆற்றலும், நல்ல பண்புகளும் உண்டு, மனிதனுக்குத் தேவைப்படுவன போன்ற எல்லா வித வசதிகளும் அதற்கும் தேவைப்படுகின்றன என்று திருக்கூட்டத்தார் நம்புகின்றனர். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அந்தப்படிக்கு மற்றவர்களும் நடந்து கொள்ளவேண்டும் என்ற வற்புறுத்துகின்றனர். இந்த நிலையில்தான் கடவுளுருவத்தைப் பற்றிய அந்தக் கருத்துக்களையெல்லாம் தொகையாக எதிர்நிறுத்தித், தூள்தூளாக்கித், தவிடுபொடியாக்கவேண்டிய கடப்பாடு பகுத்தறிவாளர்களைச் சார்கிறது.

எனவே பகுத்தறிவாளர்கள் கொடிக்கு அளிக்கும் மதிப்புக்கும், பக்தர்கள் கடவுளுருவத்திற்கு அளிக்கும் மதிப்புக்கும் நிரம்ப வேறுபாடுகள் இருக்கின்றன. இரண்டையும் ஒரே தன்மையில் மதிக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது, எவ்வகையிலும் பொருந்தி வராது. கழகத்தவர் கொடியைப் பொறுத்து எவ்விதக் குருட்டு நம்பிக்கையையும், மூடப் பழக்கவழக்கத்தையும் கொள்வதில்லை. ஆனால் பக்தர்களோ கடவுளுருவத்தைப் பொறுத்து ஏராளமான குருட்டு நம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும் கொண்டிருக்கின்றனர்.

பக்தர்களின் இலட்சியக் கொள்கைகளில் பலப்பல, பகுத்தறிவாராய்ச்சிக்கு முன் நிலை நிற்கும் தன்மையற்றன என்றாலும், கடவுளுருவம் பக்தர்களின் இலட்சியக் கொள்கையின் அடையாளமாக மட்டுமில்லாமல் வேறு குருட்டு நம்பிக்கைகளுக்கும், மூடப்பழக்கவழக்கங்களுக்கும் இருப்பிடமாக இருந்துவருகிறது என்பதைத் திருக்கூட்டத்தார் உணர்ந்து தெளிவுபெறுவார்களாக!

* * *

வினா: "தி. மு. கழகத்தில், பேசக்கூடிய ஐந்து, ஆறு நபர்கள் தவிர வேறொன்றும் இல்லை. ஊருக்கு இரண்டு கொடிகள் காணப்படலாம். அவ்வளவுதான்" என்று தோழர் காமராசர் கூறுகிறாரே?

விளக்கம்: தி. மு. கழகத்திற்குத் திரண்டு வரும் அறிவுப்படை - ஆற்றல்படை ஆகியவற்றின் ஆதரவைக் குறைத்து மதிப்பிட்டு மகிழ்ச்சி கொள்கிறார் தோழர் காமராசர். அப்படிப்பட்ட மகிழ்ச்சியை அவர் கொள்வதிலே நமக்குக் கவலையில்லை. நாம் தோழர் காமராசர் அவர்கள் அளிக்கும் தீர்ப்பை எதிர்பார்த்திருக்கவில்லை; பொதுமக்கள் மன்றம் அளிக்கும் தீர்ப்பைத்தான் எதிர்பார்த்திருக்கிறோம்.

தி. மு. கழகத்தைக் குறைத்து மதிப்பிடுவதன்மூலம் அவர் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ள முனைகிறார் என்பது, அவரது கூற்றிலிருந்து பெறப்படுகிறது. உலகில் கவிழ்ந்த பல வல்லரசுகளின் சர்வாதிகாரிகளெல்லாம், தோழர் காமராசரைப் போலத்தான், வளர்ந்து வந்த எதிர்ப்புச் சக்திகளைக் குறைத்து மதிப்பிட்டார்கள். வரலாறு அவர்களுக்கெல்லாம் தக்க பாடம் கற்பித்தே வந்திருக்கிறது. அது தோழர் காமராசர் அவர்களுக்கும் வருங்காலத்தில் அத்தகைய பாடத்தைக் கற்பிக்கும் என்பது உறுதி.

ஆட்சிப்பீடம் ஏறும் ஆணவக்காரர்களுக்கு உண்மை விளங்காது, அவர்களின் கண் இருண்டுபோகும்-காது அடைத்துப்போகும்-நாக்கு தடித்துப்போகும் என்று பொதுவாகச் சொல்லுவதுண்டு. அந்த நிலையில் தோழர் காமராசர் அவர்கள் இருக்கிறார் என்பது மேற்கண்ட கூற்றால் தெரிய வருகிறது.

தி. மு. கழகத்திற்குப், பேசக்கூடிய ஐந்தாறு நபர்களைத்தவிர, வேறு அறிவுப் படையினரோ - ஆற்றல் படையினரோ இல்லை என்று கருதிக்கொண்டிருக்கிறார். தி. மு. க. பேச்சாளர்களைப் பற்றி அவர் போட்டிருக்கும் கணக்கும், அறிவுப்படை - ஆற்றல் படையினரைப்பற்றிப் போட்டிருக்கும் கணக்கும் எப்படித் தவறும் என்பதைக் காலம் அவருக்கு உணர்த்தும் என்பது தெளிவு. சீனாவைச் செஞ்சீனாவாக்கிய மா - சே-துங்கின் படையில் ஆட்கள் இருகின்றார்களா? என்றுதான் சியாங் - காய் - சேக் ஒருகாலத்தில் எண்ணினான். அவன் முடிவு என்ன ஆயிற்று என்பதைத்தான் நாமும் உலகமும் அறிவோமே!

ஊருக்கு இரண்டு கொடிகள் பறக்கின்றன என்று தோழர் காமராசர் கூறியதிலிருந்தே, ஊருக்கு இரண்டு கொடிகள் ஏற்றுகிற அளவுக்கும், அவற்றின் அடியில் கூடுகிற அளவுக்கும் விடுதலைப் படையினர் திரளுகின்றனர் என்பது தானே பெறப்படுமே!

* * *

வினா: "நான் மௌனமாயிருந்தாலும் 'கல்பிள்ளையார்' என்று கூறுகின்றனர். பேசினாலும் குறை கூறுகிறார்கள். சிலர் என்னைக் கோபமூட்டுகிறார்கள்" என்று தோழர் காமராசர் பகர்ந்துள்ளாரே?

விளக்கம்: 'உள்ளதைச் சொன்னால் கோபம் வருமாம் நொள்ளைக் கண்ணனுக்கு', என்று ஒரு பழமொழி உண்டு. கண்ணில்லாதவனை கண்ணிலி என்று கூறினாலும், மூக்கில்லாதவனை மூக்கரையான் என்று அழைத்தாலும், காலில்லாதவனை நொண்டி என்று கூப்பிட்டாலும் அவர்களுக்குக் கோபம் வருவது இயல்பு. அதுபோல தோழர் காமராசரின் உண்மை நிலையை அவரிடம் விளக்கிக் காட்டினால் அவருக்குக் கோபம் வரத்தானே செய்யும். அவரது அறிவின் தெளிவு, அவர் வாய் மூடியிருந்தாலும் பிறர்க்குப் புலப்பட வழியில்லை; அவர் வாய் திறந்தாலும் புலப்படவில்லை. அவருக்கு உளறல்தான் வருகிறது; பேச்சுவரவில்லை அவரது உளறலைச் சுட்டிக் காட்டினால் அவருக்குக் கோபம் வருகிறது. நாம்தான் என்ன செய்ய இயலும்? அவர் வாய் திறப்பதைவிட மூடியிருப்பதேகூட நல்லது என்று தோன்றுகிறது.

அவர் பேசாமலிருந்தால் 'கல் பிள்ளையார்' போல் காட்சியளிக்கிறார்; பேசத்தொடங்கினாலோ 'வறட்டுத்தவளை' யாகக் கதறி உளறிக் கொட்டுகிறார்! வேதனையுறுவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

* * *

வினா: "அன்று பிரிட்டிஷாருக்குச் சலாம் போட்டீர்கள். காட்டிக் கொடுக்கிற பரம்பரை நீங்கள்தான். நீங்கள் என்னைத் தமிழ் நாட்டைக் காட்டிக் கொடுத்ததாகக் கூறினால், உங்கள் சாயத்தை முழு உண்மையுடன் வெளிப்படுத்துவது என் கடமையாகிறது" என்று தோழர் காமராசர் தி. மு. கழகத்தாரைப்பற்றிக் கூறியுள்ளாரே?

விளக்கம்: தி. மு. கழகத்தைச்சேர்ந்த யாரும் வெள்ளையருக்குச் சலாமும் போடவில்லை; அவர்களுக்கு எதனையும் காட்டியும் கொடுக்க

வில்லை. திராவிடமுன்னேற்றக்கழகத்திலுள்ள அறிஞர் அண்ணாவிலிருந்து சாதாரண உறுப்பினன்வரையில், வெள்ளைக்காரனுக்கு வேலை பார்த்துக் கொடுத்தவர்களோ, அவனிடம் தம்பிடி அளவுகூட சம்பளம் வாங்கியவர்களோ எவரும் இல்லை; எவரையும் சுட்டிக் காட்ட முடியாது. இரண்டாவது உலகப் பெரும்போர்க் காலத்தில்கூட அறிஞர் அண்ணாவை அரசாங்கம் வேலைக்கு அழைத்தது. அண்ணா அவர்கள் அதனை உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திர மனிதனாகத்தான் இருந்துவந்தார்.

தி. மு. கழகத்தின் மூத்த தலைமுறையினரான நீதிக்கட்சியினர், வெள்ளையர் ஆட்சியிடம்,இராஜவிசுவாசப் பிரமாணம் செய்துவிட்டு, அமைச்சர் அவையில் வீற்றிருந்தனரே, அதை மனதில் வைத்துக்கொண்டு தி. மு கழகத்தார் வெள்ளையர்க்குச் சலாம் போட்டதாகத் தோழர் காமராசர் கூறுகிறார் என்றால், 1919 ஆம் ஆண்டுவரையில், அகில இந்தியக் காங்கிரசு, ஒவ்வொரு ஆண்டு மாநாட்டிலும், வெள்ளையர் ஆட்சிக்கு இராஜவிசுவாசப் பிரமாணம் செய்துவிட்டுத்தான் பிறதீர்மானங்களைப் போட்டு வந்திருக்கிறது. அப்படிப்பார்த்தால் காங்கிரசே வெள்ளையர்க்குச் சலாம் போட்டு, அவர்களிடத்தில் அடிமை வேலைகள் வாங்கிப் பங்கிட்டுக் கொண்ட அமைப்புதான். இன்றுள்ள தோழர் காமராசர் உள்ளிட்ட எல்லாக் காங்கிரசுக் காரர்களும் வெள்ளையர்க்குச் சலாம் போட்டவர்கள்தாம்.

தோழர் பி. டி. இராசன் போன்ற நீதிக் கட்சிக்காரர்கள் வெள்ளையர் அரசாங்கத்திடம் இராசவிசுவாசப் பிரமாணம் செய்துவிட்டு அமைச்சர் வேலை பார்த்த காரணத்தால், அவர்களெல்லாம், வெள்ளையரின் பாதந்தாங்கிகள் என்று கூறப்படுகின்றனர். எந்த இராசவிசுவாசப்பிரமாணத்தைப்படித்துவிட்டுத் தோழர் பி. டி. இராசன் போன்றவர்கள் பதவி ஏற்றார்களோ, அதே இராசவிசுவாசப் பிரமாணத்தை வெள்ளையர் அரசாங்கத்திடம் செய்துவிட்டுத்தான பண்டிதநேரு, படேல், சி. இராசகோபாலச்சாரி, லியாகத் அலிகான், பிரோஸ்கான்நூன் போன்றவர்கள் பதவிஏற்று இடைக்கால அமைச்சரவை நிறுவினார்கள். அப்படிப்பார்க்கும்போது பண்டிதநேரு மற்றைய காங்கிரசு அமைச்சர்களும் வெள்ளையரின் பாதந்தாங்கிகளாக இருந்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இன்றைக்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் இந்தியா, பிரிட்டிஷ் முடிக்குத் தலைவணங்கி சலாம்போட்டுக்கொண்டு தானே இருக்கிறது. வெள்ளையர்க்குச் சலாம் போடும் பழக்கம் இன்னமும் சட்டப்படி இருந்துகொண்டுதான் வருகிறது.

நீதிக்கட்சியிலிருந்தவர்களெல்லாம் வெள்ளைக்காரப் பாதந்தாங்கிகள் என்றால், அப்படிப்பட்ட பாதந்தாங்கிகளில் பலர் காங்கிரசு சட்டசபை உறுப்பினர்களாக இருக்கிறார்களே! சென்னை காங்கிரசு அமைச்சரவையில் இருக்கும் இராமனாதபுரம் ராசா, மாணிக்கவேலர், பரமேஸ்வரன், ஏ. பி. ஷெட்டி, எஸ். எஸ். இராமசாமி ஆகியோர் அப்படிப்பட்ட பாதந்தாங்கிகளாக இருந்தவர்கள்தாம்.

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் அதன் சாயம் அப்பழுக்கற்றது; வெளிப்படையானது. அதனை யாரும் வெளுக்க வைக்கமுடியாது. தோழர் காமராசர் நம்பும் ஆண்டவனாலேயே முடியவில்லை என்றால், அப்பேர்ப்பட்ட ஆச்சாரியாராலேயே முடியவில்லை என்றால், இந்தக் காமராசரால் எப்படி வெளுக்கவைக்கமுடியும்; சாயமும் வெளுக்கக் கூடிய சாயமல்லவே!

தோழர் காமராசர் அவர்கள் தமிழகத்தைக் காட்டிக் கொடுத்தார், தமிழர் உரிமைகளைப் பறிகொடுத்தார், என்பதற்கு செங்கோட்டையின் பெரும்பகுதியும், தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சிச்சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுக்காக்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளும் என்றென்றும் சான்று பகர்ந்துகொண்டே இருக்கும்! தமிழர்களின் 'அவமானச்சின்னம் காமராசர்' என்று அவை என்றும் பறைசாற்றிக்கொண்டே இருக்குமே!

அப்படித் தி. மு. கழகத்தார் வெள்ளையர்க்குக்காட்டிக்கொடுத்ததாக ஒருஅறிகுறி காட்ட முடியாதே! அப்படிக் காட்டிக்கொடுக்கும்படியான தேவையே ஏதொன்றும் ஏற்படவில்லை! வெள்ளையர் கொடுக்கஇருந்த எந்த சுதந்திரத்தையும் தி. மு. கழகத்தினரோ, நீதிக்கட்சியினரோ வேண்டாம் என்று எந்த ஒருதடவையிலும் மறுத்துச் சொல்லியதில்லையே!

எனவே தோழர் காமராசர் அவர்களின் மேற்கண்ட கூற்று வெற்று ஆரவாரம் என்க!

திருத்தம்: 1-4-56 "மன்றம்" 'வினாவும் விளக்கமும்' என்ற பகுதியில், 10-ஆம் பக்கத்தில் வரும் **"ஒன்று அவர் வடிகட்டிய முட்டாளாக இருக்கவேண்டும் அல்லது கடைந்தெடுத்த, அரசியல் நாகரிகமற்ற அற்பராக இருக்கவேண்டும்."** என்ற சொற்றொடருக்குப் பதிலாக, **"அவரது போக்கு வடிகட்டிய முட்டாள்தனமானது என்று கூறுவதா? அல்லது கடைந்தெடுத்த, அரசியல் நாகரிகமற்ற அற்பத்தனமானது என்று கூறுவதா?"** என்ற சொற்றொடரைத் திருத்தமாகக்கொள்க. (ஆ-ர்)

பக்திரசம்

இரா. செழியன்

[சிவநேசம் பிள்ளை வீடு விபூதிப்பட்டை உருத்திராட்ச மாலையுடன், சிவநேசம் பிள்ளை திருப்புகழ் படித்துக் கொண்டு வருகிறார்.]

சிவநேசம் பிள்ளை : (பாடும் குரலில்)

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி முகம்வேய்தோள்
கண்டு பாவனை கொண்டு தோள்களில்
ஒண்டு காதலில் இருகோடு
மண்டி மார்பினில் விண்ட தாமென
வந்த கூர்முலை மடவார்தம்

(மிகுந்த ரசனையுடன்) ஆகா! 'மண்டி மார்பினில் விண்டதாமென வந்த கூர்முலை'— மார்பில் இரண்டு கொம்புகள் முளைத்தாற் போன்ற... (சற்று ரசித்து நிறுத்தி) ஆகா! திருப்புகழ் ரசமே தனிதான்!

(கண்ணம்மாள் கூடையுடன் வந்து, கூடையை வைத்துவிட்டு நிற்கிறாள்)

சிவ : இந்தா குட்டி! வீட்டு வேலைகளையெல்லாம் சரியாகப் பார்க்கிறாயா? அறையெல்லாம் சரியாகப் பெருக்கினாயா? நீ வேலை செய்யும்போது, நான் பார்க்கவே நேரமில்லை!

கண்ணம்மாள் : எல்லா வேலையும் ஒழுங்காக செய்துவிட்டேன். கொஞ்சம்...

சிவ : (புன்னகை செய்து) என்ன வேணும்!

கண் : பணம் கொஞ்சம்!

சிவ : சம்பளம் வாங்கி ஐந்து நாள்தானேயாகிறது!

கண் : ரொம்ப முடையாக இருக்குதுங்க! ஒரு ரூபாய்தாங்க, சம்பளத்தில் கழிச்சுக்கலாம்!

சிவ : ஒரு ரூபாயா? தருகிறேன்! ஆனால் சில்லரையில்லை சாயங்காலமாக வா! ஏன், இருட்டின பிறகுதான் வாயேன்! நீ கேட்ட ரூபாயைத் தந்துவிடுகிறேன்!

கண் : இப்பொழுது கொடுத்தீர்களானால் நல்லது, என் அண்ணாத்தை ஊரிலிருந்து வருகிறாரு!

சிவ : அண்ணன் ஒருத்தன் இருக்கிறானா? துணை யாருமில்லை என்று சொன்னாயே?

கண் : ஊருக்குப் போயிருந்தாரு! இன்றைக்கு வந்துடுவாரு! நான் சீக்கிரம் போக வேண்டும்.

சிவ : அதற்குள் அவசரப் படுகிறாயே! பூசைக்கு பூக்கொண்டு வந்துவிட்டாயா?

கண் : அந்தக் கூடையில் வைத்திருக்கிறேனே!

சிவ : உதிரியாக இருக்கு! கொஞ்சம் மாலையாகத் தொடுத்து வைத்துவிட்டுப் போயேன்! சாமி படத்துக்குப் போடலாம்!

கண் : சரிங்க!

(கண்ணம்மாள் தொடுத்துக்கொண்டிருக்கிறாள் சிவநேசம் பிள்ளை கண்ணம்மாளைப் பார்த்தபடி உலாவுகிறார்; வாய் திருப்புகழ் பாடியபடி இருக்கிறது.)

சிவ : கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி......

(கண்ணம்மா பூத்தொடுப்பதைப் பார்த்துக் கொண்டே யிருக்கிறார். பின் திடீரென்று மறுபடியும் பாடலைத் தொடங்குகிறார்.)

மண்டி மார்பினில் விண்டதாமென
வந்த கூர்முலே.......
மண்டி மார்பினில் விண்டதாமென
வந்த...வந்த...வந்த...

(கண்ணம்மாவை உற்றுப் பார்த்தபடி நிற்கிருர்.)

சிவ : எவ்வளவு அழகு!

கண் : என்ன எசமான்!

சிவ : நீ மாலே தொடுப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா? அடேடே, வேகமாக மாறி மாறி மாலேயைத் தொடுக்கிருயே!

கண் : இதிலென்ன எசமான் அதிசயமிருக்கிறது?

சிவ : அதிசயமா, அற்புதம்! மலரும் உன் கை விரலும்! ஆகா! அற்புதம், அற்புதம்! எங்கே பார்க்கலாம்! (மாலேயை வாங்குவதுபோல் அவள் கையைப் பிடித்து) கண்ணம்மா!

கண் : எட்டி நில்லுங்கள் ஐயா!

சிவ : ஏன் சத்தம் போடறே! என்ன மோசம் போய்விட்டது? என்ன நடந்துவிட்டது? (மெதுவான குரலில்) எவ்வள்வு வேண்டுமென்று கேட்கிருய்?

கண் : பக்தி வேடமும், பட்டை விபூதியும் போடுகிற நீங்க, வேலேக்காரப் பெண்ணின் மானத்தை ஏன் வாங்கப் பார்க்கிறீங்க! அநியாயங்க!

சிவ : சத்தம் போடாதே குட்டி! நான் என்ன செய்யட்டும்? பாட்டுப் படிக்கும்போது நீ என் கண் முன்னே வந்து நின்ருய்...... ஏன் இப்படிப் பயப்படுகிருய்! யாருக்கும் தெரியாது... கண்ணம்மா, கண்ணம்மா! கிட்டே வா! கண்ணல்ல! (ஓடிப்போய் பிடிக்க முயலுகிருர். கண்ணம்மா பிடிபடும் நேரத்தில் சிங்காரம் உள்ளே வருகிருன். சிவநேசரைப் பிடித்துத் தள்ளுகிருன்.)

கண் : (நடுக்கம் நீங்காமல்) நல்ல வேளேயா, நீங்க வந்திங்க! இல்லேயானுல், கொஞ்ச நேரத்தில் இந்த ஆஷாடபூதி என்னே அழித்திருப்பான்!

சிங்காரம் : எங்கேடா ஓடப்பார்க்கிறே! (இழுத்துப் போட்டு முதுகில் கொடுக்கிருன்.)

[சிவநேசம் பிள்ளே, "ஐயோ! ஐயோ!! கொலே! கொலே!!" என்று சத்தம் போடுகிருர். தெருவிலிருந்து மூன்று நான்கு பேர் ஓடி வருகிருர்கள்.]

1-வது ஆள் : என்ன அய்யா நடந்தது, ஒரே கூச்சல்!

2-வது ஆள் : யாரது, சிங்காரமா! ஜெயிலிலிருந்து எப்பொழுது வந்தாய்?

3-வது ஆள் : இவன் ஜெயிலுக்குப் போயிருந்தானு?

சிங் : திருடி விட்டேனென்று அநியாயமாக என்னேத் தண்டித்து, இரண்டு மாதம் போட்டாங்க! இன்றைக்குத்தான் விடுதலேயாகி வெளியே வந்தேன்? கண்ணம்மா இந்த வீட்டில் வேலே பார்க்கிறதாகச் சொன்னுங்க, இங்கே வந்தா, இந்தக் காமக் குரங்கு அவளேப்பிடிச்சு... உன்னே உயிரோடு விட்டு வைக்கக் கூடாது (சிவநேசரை அடிக்கப் போகிருன் மற்றவர்கள் தடுக்கிருர்கள்)

சிவ : (உருத்திராட்ச மாலேயை சரிசெய்து) இவன் யாரு?

2-வது : சிங்காரம்னு பேரு! திருட்டுக் குற்றத்தில் உள்ளே போய்......

சிங் : நான் திருடவில்லே அநியாயமாக என்னேத் தண்டித்தாங்க!

சிவ : ஜெயிலுக்குப் போய்விட்டு வருகிறதைத் தான் ஊருக்குப் போய்விட்டு வருவதாகச் சொன்னுளோ! இவள் இவனுடைய தங்கச்சிதானு?

2-வது : அண்ணன் தங்கை மாதிரிதான்......

சிவ : ஏன் இழுத்தாற்போல சொல்றீங்க?

2-வது : இவள் வேலே செய்த வீட்டில் இவர்களுடைய நடத்தை பிடிக்காமல் விரட்டி விட்டாங்க?

சிங் : அட பாவி! (அடிக்க முயலுகிருன் மற்றவர்கள் இழுத்து விடுகிருர்கள்)

சிவ : (கொஞ்சம் தைரியத்துடன்) சரிதானப்பா! கொஞ்ச நாழிகைக்குள் இந்த இரண்டு பேரும் திருடனும் விபசாரியும் என்னே கொள்ளேயடிக்கப் பார்த்தாங்க!

1-வது : ஆ!

3-வது : எப்படி!

சிவ : பூசைக்கு நான் வைத்திருந்த பூவை இந்த வேலைக்காரக்குட்டி எடுத்து மாலை யாகத் தொடுத்தாள்! நான் பார்த்துவிட் டுப் பதைபதைத்துப்போய் "நீ தொடுக் கும் மாலையைப் பகவானுக்குப் போடுவது அபசாரம்னு" சொன்னேன். அதற்கு இவள் "இந்த மாலை அந்த பகவானுக் கில்லை; இந்த பகவானுக்கு" என்று சொல்லி என் கழுத்தில் போட வந்தாள்!

1-வது : அடிப் பாவி! இவள் செய்திருப்பாள்!

சிவ : சொன்னால்கூட வேடிக்கையாக இருக் கும் "தூர நில்லடி பாபி" என்று சொல்லி நான் கோபித்துக் கொண்டபொழுது, இந்த தடியன்வந்து என்னை அடிக்க ஆரம்பித்தான்! நீங்களெல்லாம் வர வில்லையானால் நான் செத்தேபோயிருப் பேன்.

3-வது : உங்களுக்கு ஒரு ஆபத்தும் வரா துங்க! நீங்கள் பண்ணின பூசாபலன் எப் பொழுதும் காப்பாத்துங்க!

சிவ : ஆமாம்! முருகா! முருகா!

கண் : எல்லாம் சுத்த பொய்! இவர்தாங்க கண்ணே! மணியே! கண்ணம்மா! அப்ப டின்னு, கூப்பிட்டு என் கையைப் பிடித் தாரு!

சிவ : முருகா! எவ்வளவு பொய், பாபம் நிறைந்த உலகமிது! நான் பகவத் தியா னத்தில் "முருகண்ணு! மணிவண்ணு! கமலத்தரசே! கைலைநாதனே!" என்று பக்தி நாமாவளி பண்ணியதை இவள் தப்பர்த்தம் பண்ணி......அப்பப்பா! அப் பனே! முருகா !!

சிங் : நல்லா வேஷம் போடுகிறாயே! நேரில் பார்த்ததுகூட இல்லை என்று மறைக்கப் பார்க்கிறான் இந்த ஆஷாடபூதி! கையை பிடித்து இழுத்துவிட்டு, அப்பா, அப்பா என்றால் சும்மா விட்டு விடுவார்களா! அட பாபி! எத்தனை பேருடைய மான த்தை வாங்கிவிட்டு, இப்படி பக்திவேஷம் போடுகிறாயோ தெரியவில்லை!

சிவ : (கோபத்துடன்) உனக்கு எவ்வளவு துணிச்சலிருக்கும் என்னைப் பார்த்துப் பாபி என்று சொல்ல! அப்பனே! உனக்கு இது சம்மதம்தானா?

1-வது : அதுவும் இவரைப் பார்த்து சொல்லு கிறாயே! இந்த ஊரில் பக்திமான், பெரிய மனிதர், கோவில் தர்மகர்த்தா! இந்த ஆசார சீலரைப் பார்த்து அநியாயமா அப்படிச் சொல்லாதே!

2-வது : இந்த இரண்டு பேரும் ஏதோ கலாட்டா பண்ணிவிட்டு ஒரு பாவமும் தெரியாத நம்ம பெரிய ஐயாமீது பழி போட்டுப் பேசறாங்க!

சிவ : பாபாத்மாக்களே! உங்களைப் பார்க்க என் கண்கள் கூசுகின்றன! என்னெதி ரில் நிற்காமல் போய்விடுங்கள்!

3-வது : சும்மா விடக்கூடாதுங்க! உங்கமீது அநியாயமாச் சொன்னவர்களைக் கட்டி வைத்து உதைக்கணுங்க!

சிவ : சும்மா விடுங்கள் பாவத்திற்கான தண் டனையை அவர்கள் அனுபவிப்பார்கள்!

சிங் : பாவம் செய்வது நீ, அதற்குத் தண் டனை அனுபவிக்கிறது நானா? வா, கண் ணம்மா, நான் வந்ததால் நீ தப்பித்துக் கொண்டாய்! இனிமேல் இதுமாதிரி பக்தி மான்கள், பெரிய மனிதர்கள் வீட்டில் வேலைக்குப் போக வேண்டாம்! நானே வேலைபார்த்து உன்னைக் காப்பாற்று கிறேன் (போகிறார்கள்)

[கூட்டம் கலைந்து போகிறது. சிவநேச மும் ஒருவர்மட்டும் தனியாக இருக் கிறார்கள்]

ஒரு : நீங்க என்ன பக்திப் பாடல் படித்துக் கொண்டிருந்தீர்கள்!

சிவ : திருப்புகழ்!

ஒரு : அதான்! பாட்டு கொஞ்சம் விரசமா யிருக்கும்!

சிவ : விரசமா? அபசாரம், அபசாரம்! அப் படிச் சொல்லக் கூடாது. பக்திப் பாடல் களைப் பாபக்கண் கொண்டு பார்க்கக் கூடாது!

ஒரு : பக்திக் கண்கொண்டே பார்க்கலாம்! நீங்கள் பாடின பாட்டு என்ன?

சிவ : [பாடும் குரலில்]

கண்டு போல்மொழி வண்டு சேர்குழல்
கண்கள் சேல்மதி முகம் வேய்தோள்
கண்டு பாவனைகொண்டு தோள்களில்
ஒண்டு காதலில் இருகோடு
மண்டி மார்பினில் விண்டதாமென
வந்த கூர்முலை மடவார்தம்

ஒரு : ஆகா! பிரமாதம்! கற்கண்டு போன்ற மொழி, வண்டுகள் மொய்க்கும் மலர்க் கூந்தல், சேல்போன்ற விழி, மதிபோன்ற முகம், அழகிய தோள்கள், இரண்டு கொம்புகள் மார்பினில் எழுந்தது என்னும்படியான......ஆகா! கம்பனைவிடச் சிறந்தவன் அருணகிரி என்பது இன்றைக்குத்தான் தெரிந்தது!

சிவ : உண்மையாகவா?

ஒரு : கம்பரசம்! திருப்புகழ் அமிர்தம்! பெண்களை எப்படி, எப்படியெல்லாம் வருணித்திருக்கிறார்கள் பக்திப்பெருக்கில்......

சிவ : அபசாரம்! நீங்கள் ஏதோ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறீங்க! பெண்களை வருணிப்பதற்காகச் சொல்லவில்லை!

ஒரு : இப்பொழுது சொன்னதெல்லாம் பெண்களைப்பற்றிதானே?

சிவ : நாலாவது அடியில் என்ன சொல்கிறார் பாருங்கள் :

......மடவார்தம்
வஞ்ச மால்தில் நெஞ்சு போய்மடி
கின்ற மாயமது ஒழியாதோ!

அதாவது இப்பேற்பட்ட பெண்களின் வஞ்சத்தில் நெஞ்சைவைத்து ஒழிந்து போகாதே என்று சொல்கிறார்!

ஒரு : ஓகோ! முதல் மூன்று அடிகளில் பெண்களை வருணித்துவிட்டு நாலாவது அடியில் அது வஞ்சகம், மாயம், வேண்டாமென்கிறார். இன்னும் சொல்லுகிறாரா இதோடு பாட்டு நிற்கிறதா!

சிவ : மேற்கொண்டு நாலடிகளில் முருகப் பெருமானைப் புகழ்ந்து அருணகிரியார் பாடுகிறார்!

ஒரு : உங்களுக்கு நேரமிருந்தால் அதை நீங்கள் சிறிது பாடுங்கள்! சித்தங்குளிரக் கேட்கலாம்.

சிவ : திருப்புகழ் படிப்பதற்கில்லாத நேரம் வேறு எதற்குத்தான் பயன்படப்போகிறது! அதுவும் முருகப்பெருமானைப் பற்றிப் பரவசத்துடன், பக்தியுடன் பாடுகிற இடம்! உலகப் பெண்களின் காம மோகத்தில் மனதைப் பறிகொடுக்காதே என்று சொல்லிவிட்டு அருணகிரி மேலும் முருகப்பெருமானைப் பற்றிச்சொல்லுகிறார்!

"கொண்ட லார்குழல் கெண்டை போல்விழி
கொண்டு கோகில மொழிகூறும்
கொங்கை யாள்குற மங்கை வாழ்தரு
குன்றில் மால்கொடு செலும்வேலா!

ஒரு : என்ன மறுபடியும் பெண் வருணனை வந்துவிட்டது! கொண்டல் போன்ற குழல், கெண்டைபோன்ற விழி, குயில் போன்ற மொழி, பின் மார்பு, மலை...என்னய்யா!

சிவ : வள்ளி நாயகியைப்பற்றிச் சொல்கிறார்—இப்பேற்பட்ட குறமங்கை வள்ளியுடன் இருக்கின்ற முருகனே!

ஒரு : உலக மாயத்தைச் சொல்கின்றபோது பெண்களைப்பற்றி வருணித்தார்! அது போகட்டும் அடுத்த நாலடியைப்பார்த்தால் அதிலும் வள்ளிநாயகியை வருணிக்கிறேனென்று, அங்கேயும் ஆசாமி அங்க அடையாளங்களைச் சொல்ல ஆரம்பித்துவிட்டாரே! இதுதான் பக்திப் பரவசமா? அந்த வேலைக்காரப் பெண் சொல்லியது உண்மையாகத்தான் இருக்கும்போலிருக்கிறது. அருணகிரி நாதர் உபதேசிக்கிறதுபோலவே அவள் அங்க அழகுகளைப் பார்த்து, கையைப் பிடித்திழுத்து, இணங்கியிருந்தா கட்டிலறைக்கு இழுத்துக்கொண்டுபோய் கடைசியாக அவளிடமே "இந்தமாதிரி காரியங்களில் உன் மனதைப் பறிகொடுக்காதே!" என்று உபதேசிப்பீங்க அப்படித்தானே!

சிவ : ஏதோ தாறுமாறாகப் பேசறே! நான் போகிறேன்! முருகா! முருகா! (உள்ளே போகிறார்.)

ஒருவர் : (அவர் போவதைப்பார்த்துச் சிரித்து) முருகா! அவர் இப்போ எங்கே இருக்காரோ? வள்ளிகிட்டேயோ, தெய்வானை கிட்டேயோ உட்கார்ந்து திருப்புகழ் பாடிகிட்டு இருப்பாரு!

(போகிறார்.)

★

மே தினம்

"நான் இதற்குமுன் வறுமையைப் பார்த்திருக்கிறேன், பல நாடுகளில் வறுமையாளர்களைப் பார்த்திருக்கிறேன், அதைவிட அதிகமாக வறுமை நிலைமையைப் பற்றி படித்திருக்கிறேன். இருந்தாலும், வறுமையின் கோரநிலை: பயங்கரப் படப்பிடிப்பு இந்தியாவிற்குள் நுழைந்ததும்தான் தெரிந்தது. அங்கு ஒரு தொழிலாளியை அவன் குடும்பத்தின் மத்தியில், வீடு என்று அழைக்கப்படும் இடத்தில் பார்க்கும்பொழுது, இந்த உருவம் மனித வகுப்பைச் சேர்ந்ததுதானு? அல்லது கற்பனையில் எழுந்திடும் உணர்ச்சியற்ற உருவமா? பத்து அடி சதுர அறையில்—திரும்பக்கூட முடியாத சிறு இடத்தில், குடும்பம் முழுவதும் அடைக்கப்பட்டிருக்கின்றது. சமைப்பது, உண்பது, குளிப்பது, உறங்குவது, பிள்ளை பெறுவது, வளர்வது எல்லாம் அந்த சிறு அமைப்புக்குள்தான், மலங்கழிக்கும் இடம் ஒன்றுதவிர, குடும்பத்தினரின் வாழ்க்கை நடவடிக்கைகள் முழுவதும் அந்த அறைக்குள் அடங்கிவிடுகின்றன...பெரும்பாலும் அறைகள் இருளடர்ந்து இருக்கும், நுழைபவர்கள் சிறிது நேரம் சென்று இருட்டுடன் பழகியபின்தான் உள்ளே உருவங்கள் நடமாடுவது அவர்களுக்குத் தெரியும்."

இந்தியாவிலுள்ள தொழிலாளர் நிலைபற்றி ஆராயவந்த ஒருவர், பம்பாயிலுள்ள தொழிலாளர் அறைகளைப் பார்த்ததும் திடுக்கிட்டு, மேற்கண்டவாறு எழுதினர். வறுமையில் போராடும் மனிதர்களை அவர் அதற்குமுன் பார்த்திருக்கிருர். வறுமையால் விரட்டப்பட்டு மனிதகுலத்திற்கு அப்பாற்பட்டு, "இவர்கள் மனிதர்களா? அல்லது மனிதர்களைப்போன்ற கற்பனை உருவங்களா?" என்று கேட்குமளவுக்கு உருமாறியவர்களை அவர் அதற்குமுன் பார்த்ததில்லை. பம்பாய், கல்கத்தா போன்ற இடங்களில் இருப்பதைவிட அதிக மோசமான நிலை சென்னையிலும், அதற்குத் தெற்கிலுள்ள இடங்களிலும் நிலவுகிறது.

இதையே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும் கன்னங் கருத்த இருட்டின் கறை தொங்கும் நரம்பின்தூள்! "என்று தொழிலாளர் பற்றிக்கூறினர்.

மற்ற எந்த நாடுகளிலும் இருக்கும் தொழிலாளர்களைவிட, அதிகமான நேரம், அதிகமான அளவு இந்த நாட்டில் தொழிலாளர் உழைக்கின்றனர். ஆனல் வேறெங்கும் காண முடியாத அளவு வறுமையும், பஞ்சநிலையும் இந்தநாட்டில்தான் இருக்கிறது. விடிவெள்ளி முளைக்குமுன் எழுந்து வேலைக்குச் செல்பவன், மாலை இருட்டுக்குப்பின்தான் வேலைவிட்டுத் திரும்புகிருன். சலியாத உழைப்பு! ஆனல் பலன் கிடையாது. வேகாத வெய்யில், விடாத மழை, கொட்டும் பனி, குளிர்க்காற்று எதுவும் அவனை வேலைக்குப் போகாமல் நிறுத்துவதில்லை. வேலைக்குப் போகவில்லை என்ருல், பிணி அவனைச் சூழ்ந்துவிட்டது, சாவு அவனை நெருங்கிவிட்டது என்றுதான் அர்த்தம்.

உழைப்பின் நேரம் அதிகம், உழைப்பின் அளவும் அதிகம். ஆனல் ஒட்டிய வயிறும். ஊமைப் பார்வையும்தான் தொழிலாளியாக இங்கு காட்சி யளிக்கின்றன. காரணம் என்ன?

உழைப்பு அதிகம் என்ருலும் அதிலிருந்து கிடைக்கும் பலன் மிகக் குறைவு, மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்பொழுது! கிடைக்கும் சிறிது பலனிலும், சரியான பங்கு உழைப்பாளிக்குச் சேர்வதில்லை.

மற்ற நாடுகளில் தொழிலாளர்களுக்கு உதவியாக, இயந்திர வசதிகள் இருக்கின்றன இங்கு அதிகமான பேர் அதிகநேரம் வேலை செய்து, குறைவான பலனை எடுக்கிருர்கள். ஆனல் பிறநாடுகளில் இயந்திர வசதிகளால் குறைவான நேரத்தில் நமது நாட்டில் கிடைப்பதைவிட அதிகமான பங்கு பலனைப் பெற முடிகிறது.

மனிதனின் வாழ்க்கைத் தரம் உயர்கிறதென்ருல், குறைந்த நேரத்தில் வாழ்க்கை வசதிகளைப் பெற்று, மிகுந்திருக்கும் நேரத்தை ஓய்வுக்காகவும், உல்லாசத்திற்காகவும், தனக்குப் பிடித்தமான பொழுது போக்கிலும் பயன் படுத்த முடியவேண்டும். மற்ற நாடுகளில் ஆறு மணி நேரம், ஏழுமணி நேரம் உழைப்பில் தன்னையும் தன் குடும்பத்திற்குமான வாழ்க்கைத் தேவைகளையும், மேற்கொண்டு உல்லா

சத் தேவைகளையும் பெறவும் முடிகிறது. நமது நாட்டில் உள்ள தொழிலாளி பன்னிரண்டு மணிநேரம் உழைத்தாலும் வறுமைப் பிடியிலிருந்து தன்னையும் தன்குடும்பத்தினரையும் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை.

இந்திய வருமானத்தைப்பற்றி ஆராய்ந்த சா, காம்பட்டா என்ற இரு (இந்திய) பொருளாதார நிபுணர்கள், இந்தநாட்டின் பொருளாதார நிலையைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். "இங்குள்ள சாராசரி வருமானத்தைப் பார்த்தால், மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பகுதியினருக்கு மட்டும் மூன்றுவேளை சாப்பாட்டுக்குப் போதும். அல்லது எல்லோருக்கும் பகுர்ந்தால், இரண்டுவேளை சாப்பாடும் ஒருவேளைப் பட்டினியும் கிடைக்கும். ஆனால் இந்த இரண்டுவேளைச் சாப்பாட்டுக்குப்பின், அவனுக்கு வேறு எந்தவசதியும் கிடைக்காது, உடையில்லாமல் போகவேண்டும், வீடில்லாமல் திறந்த வெளியில் அலைய வேண்டும், உல்லாசமோ, பொழுதுபோக்கோ எதுவுமே எதிர்பார்க்கக்கூடாது. இரண்டு வேளை உணவு - அதுவும் அடிப்படையான, கடைசித்தர, உணவு - மட்டும் கிடைக்கும்.

இது இந்தியா உபகண்டத்தின் பொதுப்படையான நிலை. வடநாடு, தென்னாடு என்று பிரித்துப் பார்த்தால், தென்னாட்டின் நிலை இன்னும் மோசமானது. வடநாட்டில் இருக்கும் தொழிலாளி — உழவனாயிருந்தாலும் சரி. ஆலைத் தொழிலாளியா யிருந்தாலும் சரி— தென்னாட்டிலிருப்பவர்களைவிட அதிகம் சம்பாதிக்கிறார்கள்.

தென்னாட்டில் ஒரு தொழிலாளிக்கு நாளொன்றுக்கு 13 அணவுக்குக் குறைவான கூலி கிடைக்கிறது. வடநாட்டில் ரூ. 1—10க்குமேல் கூலி கிடைக்கிறது.

இந்திய உபகண்டத்துக்குள் தென்னாட்டுத் தொழிலாளியைவிட வடநாட்டுத் தொழிலாளிக்கு இரண்டு பங்கு லாபம் கிடைப்பதற்குக் காரணம், அங்கு தொழில் வளம், இயந்திர வசதிகள் அதிகரித்திருப்பதுதான் முதன்மையானதாகும்.

வாழ்க்கை நிலை உயர, தொழில்வளம் பெருகவேண்டும். உழைப்புக்கும். நாட்டிற்குத் தேவையான உழைப்பை நல்கிடும் தொழிலாளருக்கும் உரிய மதிப்பு அளிக்கப்பட வேண்டும். சமூகத்தில், பொருளாதாரத்தில், அரசியலில், உரிமைகள் பெறவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய குறிக்கோள்கள் இவைகளாகும். மே விழா நன்னாளில் தனது அடிப்படை நோக்கங்களை முன் வைத்து, கழகம் பணியாற்றுகிறது.

இம் மே தினத்தில் நாட்டினுள் சிதறிக் கிடக்கும் தொழிலாளரை மட்டுமல்ல; நாட்டின் வெளியேயும், கடல் கடந்த பர்மா, இலங்கை, மலேயா, தென் ஆப்ரிக்கா முதலிய இடங்களில் சிதறிக் கிடக்கும் தமிழர்களை— உழைப்பாளர்களையும் நினைவுக்குக்கொண்டு வர வேண்டும். தாய் தந்தையரையும், மனைவி மக்களையும், உற்றார் உறவினரையும் பிரிந்து கூலிவேலை செய்து பிழைக்க வெளிநாடு சென்றவர்கள், ரப்பர் காடுகளிலும், தேயிலைத் தோட்டங்களிலும் கண்ணீர்விட்டுக் கலங்கும் உழைப்பாளர்கள், அவர்களின் கவனம் வந்துதான் தீரும். பொன்னி நதிக்கரையில் பொன் கொழிக்கும் வயல்களிருக்க, வைகை நதிக் கரையில் வளஞ்சுரக்கும் தோட்டங்களிருக்க, பருத்தி விளையும் இடங்களும், பலவகை உலோகங்களைத் தரும் சுரங்கங்களும், மலைச் சரிவுகளும், அலைகடலும், பொன்னும்மணியும் பூவும் கனியும், தென்றலும் தேனும் அனைத்துமிருக்கின்றன. திராவிட நாட்டில், இவ்வளவு வளங்கள் தங்கியிருக்கும் நாட்டில், மனிதன் தங்கி வாழ வழியின்றி வேற்று நாடுகளுக்கு ஓடவேண்டியிருக்கிறது. இந்த நிலைமாறி, திராவிட நாட்டின் தனியரசு, தன் மக்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளும் பண்பும் செல்வ நிலையும் பெற வேண்டும். மே தினம் அத்தகைய புதிய அமைப்புக்கும் நல்வாழ்வுக்கும் வழி அமைப்பதாகும்.

அட்டைப்படம்

திராவிடத் தொழிலாளி ஒருவரின் துயரத் தோற்றம்—ஏழ்மையின் எடுத்துக்காட்டு—வறுமையின் படப்பிடிப்பு—சிந்தனையாளரின் பார்வைக்கு மே தினத்தில் வைக்கப்படும் ஓர் காணிக்கை!

திருமணத்தால் நிலைக்கும் திருநாடு

மொனாக்கோ (Monaco)—உலகில் சுதந்திரமும் சுயேச்சையும்கொண்ட சின்னஞ்சிறு தனி நாடுகளில் நான்காவது சிறிய நாடாகும். மொனாக்கோவைவிடச் சிறிய நாடு **சான் மரினோ** அதைவிடச் சிறிய நாடு **அந்தோரா.** அதையும் விடச் சிறிய நாடு **வாட்டிகன் சிட்டி.**

வாட்டிகன் சிட்டியின் மக்கள் தொகை சுமார் 1000தான். அந்தோரா, சான்மரினோ, மொனாக்கோ ஆகிய நாடுக்ளின் மக்கள் தொகை முறையே 5500, 15000, 21000 ஆகும்.

மொனாக்கோ, ஒரு சிறிய குன்றுகளடர்ந்த பகுதி. அது பிரெஞ்சு நாட்டோடு இணைந்த மத்தியதரைக் கடற்கரையில் இருக்கிறது. அதன் பரப்பு சுமார் எட்டு சதுர மைல்கள் ஆகும். இவ்வளவு குறைந்த அளவு பரப்பையும், மக்கள் தொகையையும் கொண்ட மொனாக்கோ, எந்த ஒரு வல்லரசின்கீழும் போகாமல் சுதந்திர நாடாக விளங்கி வருகிறது என்பது தான் வியப்பாகும்.

மொனாக்கோவின் முக்கியமான ஏற்றுமதி பொருள்கள் ஆலிவ் எண்ணெய், ஆரஞ்சுகள், நறுமணப் பொருள்கள். மொனாக்கோவின் தலைநகரான மாண்டே கார்லோவிலுள்ள சூதாட்டக் கொட்டகைகளின்மூலம் கிடைக்கும் வருமானத்தோடு ஒப்பிட்டால் ஏற்றுமதி வருமானம் மிகச்சொற்பம். இந்த நகர் உலகத்தின் புகழ்வாய்ந்த சூதாட்ட நகரமாக இன்றும் காட்சியளித்து வருகிறது. மொனாக்கோவின் எல்லாவளங்களும், மாண்டே கார்லோவைப் பொறுத்துத்தான், பார்வையாளராக வருபவர் தரும் கொழுத்த வருமானத்தால்தான் 21000 மக்கள் வாழ்கிறார்கள்.

மொனாக்கோ அரசாங்கத்திற்குச் சூதாட்டக் கொட்டகைகளின் லைசென்சுக் கட்டணங்கள் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் பத்து இலட்சம் பவுன்கிடைக்கிறது. மொனாக்கோவிலுள்ள மக்கள் சூதாட்டங்களில் கலந்துகொள்ள அரசாங்கத்தால் அனுமதிக்கப்படுவதில்லை, வெளிநாடுகளிலிருந்து பார்வையாளராக வருபவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். ஆண்டு ஒன்றுக்குப் பத்து இலட்சம் பார்வையாளர்கள் அந்த நாட்டுக்கு வருகிறார்கள்.

மொனாக்கோ மக்கள், பெரும்பாலும் வரிகள் விதிக்கப்படாமலேயே வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

'ஹெர்குலீஸ்' என்ற கிரேக்கப் பழங்கடவுளின் பெயரே 'மொனாக்கோ' என்பதாகும். கிரேக்க மொழியில் 'ஹெர்குலீஸ்'-க்கு 'மொனோ காய்ஸ்' என்றொரு புனைபெயர் உண்டு. அந்தப் பெயரின் சிதைவே 'மொனாக்கோ' என்பதாகும்.

எண்ணூறு ஆண்டு காலம் தொடர்ந்தாற்போல் சுதந்திரமாக வாழ்ந்துவந்த 'மொனாக்கோ' கி. பி. 1793இல் பிரான்ஸ் வல்லரசோடு வென்று இணைக்கப்பட்டது. 1846-இல் அது சார்டினியாவின்கீழ் வந்து சேர்ந்தது. 1861ல் அது மீண்டும் பிரெஞ்சு அரசன் விக்டர் எமானுயல் காலத்தில் பிரெஞ்சு நாட்டுக்கு விற்கப்பட்டது. இப்பொழுது மொனாக்கோ இளவரசனின் ஆணையின்கீழ் அமைச்சரவை ஒன்று இருந்து ஆட்சிப் பொறுப்புகளை ஏற்று நடத்திவருகிறது.

1922ஆம் ஆண்டில் இரண்டாவது லூயி என்பான் மொனாக்கோவின் அரசனாக வந்தான். அவனுக்கு அடுத்தாற்போல் அவனது மகள் பட்டம் ஏற்கவேண்டும் என்ற நிலை இருந்தது. தன் மகன் இளவரசன் ரெய்னியர் என்பானுக்குச் சார்பாக அவள் தனது உரிமைகளை விட்டுக் கொடுத்தாள்.

1918-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கைபடி, மொனாக்கோ நாட்டு மன்னன் மணம்புரிந்துகொள்ளாமலோ அல்லது அவனுக்கு வாரிசு ஏற்படாமலோ, போய்விட்டால், அந்த நாடு பிரான்ஸ் நாட்டுடன் இணைக்கப்படவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மொனாக்கோவை பிரான்ஸோடு இணைப்பது என்றால், அதன்மீது புதிய வருமானவரியும் பிறவரிகளும விழும், இராணுவ ஆதிக்கம் ஏற்படும், அதன் முழுச் சுதந்திரமும் பறிக்கப்படும் என்று பொருள். மொனாக்கோவின் சுதந்திரம் தொடர்ந்து காப்பாற்றப்படவேண்டுமானால், அதன் மன்னன் மணம் புரிந்துகொள்ளவேண்டும், அவனுக்கு வாரிசு ஏற்படவேண்டும்.

இப்பொழுது மொனாக்கோவை ஆண்டு வரும் ஆயிரம்ஆண்டு பரப்பரையைச் சேர்ந்த ரெய்னியர்திருமணம் செய்துகொள்ள முற்பட்டுள்ளார். தனது வாழ்க்கைத் துணைவியாக அவர் தேர்ந்தெடுத்துள்ள மங்கை நல்லாள் 'ஹாலிவுட்' நட்சத்திரமான **கிரேஸ் கெல்லி.**

மொனாக்கோநாட்டுமக்கள் தமது அரசனுக்கு எப்படியோ திருமணம் நடந்தேறவேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாகவும், கவலையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இப்பொழுது அரசன் செய்துள்ளமுடிவை, அம்மக்கள் முழுமனதோடு போற்றி, மகிழ்ச்சியோடு வரவேற்று நிற்கிறார்கள். காரணம் அவர்கள் நாட்டின் சுதந்திரம் அரசனின் திருமணத்தோடு பிணிக்கப்பட்டிருப்பதேயாகும்.

மலாயா தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி!

எம்மொழியிலும் சிறந்த மும்மொழியின் ஏடுகளை செம்மையதாய் விற்பனைக்கு வைத்திருக்கும்—அவ்வை அருமைபெரு நூல் நிலையம் ஒன்றே இக் கம்பாரில் பெருமையுடன் வாங்க! வருக !!

அன்பர்களே! வணக்கம். எங்களிடம்,

* அறிவு பெற அறிஞர்களின் இலக்கிய இதழ்கள்!
* கருத்தூற கவிஞர்களின் காவிய ஏடுகள்!
* அன்றாட நிகழ்ச்சிகளை உடனுக்குடன் தாங்கிவரும், ஆங்கில, மலாய், தமிழ், தினசரி ஏடுகள்!
* குடும்பங்களுக்குப் பிடித்த முதல்தரமான கதைப் புத்தகங்கள்!
* குழந்தைகளின் உள்ளங்களை குளிரவைக்கும், திங்கள்–வார இதழ்கள்; நகைச்சுவை ததும்பும் சிறுகதைப் புத்தகங்கள்!
* பாலர் வகுப்பிலிருந்து, மேல் வகுப்புவரை பயன்படுத்தும் பள்ளிக்கூடப் புத்தகங்கள்!
* சினிமா சம்பந்தமான சிறுகதைகளைத்தாங்கி வெளிவரும் திங்கள் வார இதழ்கள், வசனம், பாட்டுப் புத்தகங்கள்!

முதலியனவும், இன்னும் இதில் குறிப்பிடாத பிரபல வரலாற்று ஏடுகளும் கதைப் புத்தகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும், குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

குறிப்பு :—தையல் வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

N. B. விவரங்களுக்கு :— **அவ்வை புத்தக நிலையம்,**

142, ஜாலன் இட்ரீஸ்; கம்பார், (மலாயா)

உரிமையாளர் :—கோ. வரதராசன். டெலிபோன் நெ. 22

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. PERAK, MALAYA.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்–ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

Regd. M 6296 MANRAM

தி. மு. க. 2-வது மாநில மாநாடு

திருச்சி

மே 17, 18, 19, 20-இல்

பெரிய இரயில்வே நிலையத்திற்கு அருகிலுள்ள பந்தயத்திடலில் அமைந்துள்ள

'வள்ளுவர் நகரில்'

நடைபெறும்

தலைவர்: **இரா. நெடுஞ்செழியன்**

திறப்பாளர்: **ஜி. பி. சோமசுந்தரம்**

வரவேற்புக்குழுத்தலைவர்: **ஏ. பி. தருமலிங்கம்**

மாநாட்டில் கலைவிருந்து அளிப்போர்

என். எஸ். கிருஷ்ணன்
எம். ஜி. இராமச்சந்திரன்
எஸ். எஸ். இராஜேந்திரன்
டி. வி. நாராயணசாமி
கே. ஆர். ராமசாமி
நாகூர் அனிபா
ஜி. கஸ்தூரி
பி. எஸ். செல்வா
திருவாவடுதுறை டி. என். இராசரத்தினம்

கருத்துவிருந்து அளிப்போர்

அண்ணா

என். வி. நடராசன்
கே. ஏ. மதியழகன்
க. அன்பழகன்
கண்ணதாசன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
கி. மனோகரன்
காஞ்சி கல்யாணசுந்தரம்
அருண்மொழி
தில்லைவில்லாளன்
கே. கே. நீலமேகம்
ஏ. கோவிந்தசாமி
எம். எஸ். இராமசாமி
ஈ. வெ. கி. சம்பத்
மு. கருணாநிதி
சி. பி. சிற்றரசு
சத்தியவாணிமுத்து
என். எஸ். இளங்கோ
கா. அப்பாத்துரை
அரங்கண்ணல்
ப. உ. சண்முகம்
அ. பொன்னம்பலனார்
எம். பி. சுப்பிரமணியம்
இரா. சு. தங்கப்பழம்
அலமேலு அப்பாத்துரை

—மாநாட்டு விளம்பரக்குழு.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
... இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது